விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 08 வெள்ளிக்கிழமை (20.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 063

# தென்னாபிரிக்க நல்லிணக்கத்தை இலங்கை அரசாங்கம் பின்பற்றாது

## உள்ளூர் திட்டத்தில் தீர்வு – அஜித்

(கொழும்பு) தென்னாபிரிக்காவின் உண்மையைக் கண்டறியும் மற்றும் நல்லிணக்கத்திற்கான திட்டத்தை இலங்கை அரசாங்கம் பின்பற்றாது என வெளியுறவுத்துறை பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார். எனினும் அதனை உதாரணமாகக் கொண்டு அரசாங்கம் உள்ளூர் திட்டமொன்றை உருவாக்கும் என அவர் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்திய விஜயத்தின் ஒரு பகுதியாக அவர் திருப்பதி வெங்கடேஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டார். அவ்வேளை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தினரால் ஜனாதிபதிக்கு வெங்கடேஸ்வரப் பெருமானின் திருவுருவப்படம் கையளிக்கப்பட்டது.

## ஆட்சிமாற்றத்திற்கு பின்னரும் தமிழ் மக்களுக்கு விடிவில்லை

### நீதிக்கான தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சி மாற்றத்திற்கு பின்னரும் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு இன்னும் எதுவித மான பயனும் இல்லை என சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நாகவிகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவ் அமைப்பு இதனை சுட்டிக்காட்டியுள்ளது.

அவ் அமைப்பு மேலும் தெரிவிக்கையில், தமிழர்கள் தொடர்ந்தும் பயத்துடனும் தமது வாழ்வில் சுதந்திர உணர்வின்றி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தமிழர்களின் பொது வாழ்வியலானது இராணுவத் தரப்பினரால் கட்டுப்படுத்தப்படுகின்றது என குறிப்பிட்டுள்ளது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட கோட்டை நாகவிகாரை 24ஆம் பக்கம் பார்க்க....

## மாணவனை மோதியது ரயில்; கண்டித்து மக்கள் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பற்ற புகையிரத கடவையினை சைக்கிளில் கடக்க முற்பட்ட மாணவனை ரயில் மோதியதில் அம் மாணவன் படுகாயமடைந்துள்ளார்.

இதன்போது கொதிப்படைந்த அப்பிரதேச மக்கள் ஒன்று திரண்டு தண்டவாளத்துக்கு குறுக்கே மின் கம்பங்களைப்போட்டு 23ஆம் பக்கம் பார்க்க....

## அரிசியின் விலை குறையும் – அரசு



(கொழும்பு)

இரண்டு வாரங்களில் அரிசியின் விலையை குறைக்க முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க....

## ஓமந்தையில் ஒருவரை மோதியது ரயில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் 23ஆம் பக்கம் பார்க்க....

## தனியார் சம்பள அதிகரிப்பிற்கு சம்பள நிர்ணய சபை இணக்கம்

(கொழும்பு)

தனியார் துறைகளின் சம்பளத்தை 15 - 35 சதவீதமாக அதிகரிக்க சம்பள நிர்ணய சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

சம்பள நிர்ணய சபை, தொழிற் சங்கங்கள் என்பவற்றுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னரே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று 23ஆம் பக்கம் பார்க்க....

## 100 நாள் திட்டத்திற்கு நாடாளுமன்றம் ஒத்துழைக்காவிடின் மக்கள் ஆணை பெறப்படும் - ரணில்



(கொழும்பு)

அரசாங்கத்தின் 100 நாள் திட்டத்திற்கு உரிய ஒத்துழைப்பு கிடைக்காவிட்டால் மக்கள் ஆணை பெற்றுக்கொள்ளப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை 23ஆம் பக்கம் பார்க்க....

…வு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு தெற்கில் விடுதி அமைப்பு; திருமுறைக் கழகம் கடும் எதிர்ப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்கு கடலோரப் பகுதியில் உள்ள அரச காணியில் ஹோட்டல் அமைப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்பகுதியைச் சேர்ந்த சிலர் மண்டைதீவு தெற்கு கடலோரப் பகுதியில் உள்ள அரச காணியை குத்தகைக்கு எடுத்து விடுதி அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் குறித்த இடத்தை பார்வையிட்டதாகவும் தெரிய வருகிறது.

இதேநேரம் மண்டைதீவு கடலோரப் பகுதியில் ஹோட்டல் அமைக்கப்படுவதை மண்டைதீவு திருமுறைக் கழகம் கடுமையாக எதிர்த்துள்ளதுடன் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் மகஜரை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இனந்தெரியாதவர்கள் வீடு புகுந்து களவு

(யாழ்ப்பாணம்)

மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் மு. குமாரவேலின் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாதவர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்களையும் முக்கியமான ஆவணங்களையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன் கிழமை பகல் பொழுதில் நடந்துள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத வேளையில் நடந்த இச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந)


## விற்பனைக்கு

முட்டையிட்டு ஓய்ந்து 5 மாதங்கள் கொண்ட பிறீமா சிவப்பு இனக்கோழிகள் விற்பனைக்குண்டு. அச்சுவேலி சேவல் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு.

தொ.பே:0771745178

(சி-212)



சம்பந்தர் மொடேர்ன் வைத்தியசாலையில் என்புமுறிவு (Orlhopeadic) கிளினிக் வழமைபோல் நடைபெறுகின்றது

தொடர்பு:-0778730129

(9566)


## யாழ்.இந்துவின் இல்லமெய்வல்லுநர் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் எஸ்.தயானந்தராஜா அறிவித்துள்ளார்.

இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் மேற்படி அறிவித்தல் விடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னர் வெளியான செய்தி வலம்புரியின் 06-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது. (செ-11)

## கண் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் லயன் கழகத்தின் அனுசரணையுடன் நல்லூர் ஆடியாதம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்திய சாயி பஜனை சேவா நிலையத்தில் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9-1 மணி வரை இடம்பெறவுள்ளது.

அத்துடன் கண் பரிசோதிக்கப்பட்டு தகுந்த வாசிப்புக் கண்ணாடி வழங்கப்படும். முதியோர் மற்றும் வாசிப்புப் பிரச்சினை உள்ளவர்கள் இவ் இலவச உதவியைப் பெற முடியும் என நல்லூர் லயன் கழகம் அறிவித்துள்ளது. (செ-3)


1 ஆம் ஆண்டின் இனிய நிறைவாக விசேட விலைக்குறைப்பு

பெப்ரவரி 21- மார்ச் 31 வரை

11.30 am- 2.30 pm வரை

வாரத்தில் மூன்று தினங்கள் (திங்கள், வியாழன், சனி)

சிக்கன் பிறைற்றைஸ் பாசல் 220/- 190/-

மரக்கறி பிறைற்றைஸ் பாசல் 120/- 100/-

சுவை உலகின் "சூப்பர் ஸ்டார்"

கோல்டன் ஸ்ரார்

86/2 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

(ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்)

தொ.பே:-0778890888


## சாட்சி பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றம்

(கொழும்பு)

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலம் கடந்த ஜுலையில் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றபோதும் நேற்று வரை தாமதிக்கப்பட்டு வந்தது.

2008-ம் ஆண்டு இது முதல் தடவையாக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது

இந்த சட்டமூலம், நிதியமைச்சினால் வரையப்பட்டது.

இந்தநிலையில் போருக்கு பின்னர் இந்த சட்டமூல நிறைவேற்றத்தினால் நீதிக்கு பக்கபலம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (செ-11)

## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை, வட்டாரம்-14 ஆதன இலக்கம்-74/124, மடத்தடி ஒழுங்கை**

வட்டாரம் 14 மடத்தடி ஒழுங்கை, ஆதன இலக்கம் 74/124 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை "கற்கிணன் தோட்டம்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாயைச் சேர்ந்த டில்லிராசா பெண் கமலேஸ்வரி ஆகிய இவர்களால் சீதன உறுதி மூலம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சசிகரன் பெண் யெனிதா என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.இரா.வசந்தசேனன் முகதாவில் நிறைவேறிய 10282 ஆம் இலக்க 2014.02.01 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தம்க்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "கற்கிணன் தோட்டம்" நிலப் பரப்பு 02 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சசிதரன் பெண் யெனிதா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## SRI NAGAPOOSHANI AMMAN KOVIL

### கூறுவிலை கோருதல்

மேற்படி ஆலயத்திற்கு பின்வரும் பொருட்கள் தேவையாக உள்ளது. எனவே அப் பொருட்களை ஆலயத்திற்கு கொண்டு வந்து தருவதற்கான (பொருட்கள், கூலி உட்பட) கூறு விலைகளை சுயமாகத் தயாரித்து 26.02.2015 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பு பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறு விலைப் பெட்டியிலோ நேரடியாக இடமுடியும்.

**பொருட்கள் விபரம்**

1) கண்டாவளை மண்-1 ரைக்ரருக்கானது
2) நாகர் கோயில்/ பூநகரி பூச்சுமணல்-1 ரைக்ரருக்கானது
3) 1 இஞ்சி கிறேசர் சல்லி-1 ரைக்ரருக்கானது
4) 3/4 இஞ்சி கிறேசர் சல்லி-1 ரைக்ரருக்கானது
5) 5/8 இஞ்சி கிறேசர் சல்லி-1 ரைக்ரருக்கானது
6) "6"-"9" கண்டக்கல்-1 ரைக்ரருக்கானது
7) சீமெந்து (மிற்சுமி)-1 பைக்கற்றுக்கானது
8) 10 MM CN முறுக்குக் கம்பி-1 பார்க்கானது 01 கம்பி
9) 12 MM CN முறுக்குக் கம்பி-1 பார்க்கானது 01 கம்பி
10) 16 MM CN முறுக்குக் கம்பி-1 பார்க்கானது 01 கம்பி
11) 6 MM பிளேன் வார் (M.S) 1 Kgக்கானது
12) கட்டுக் கம்பி-1 Kg க்கானது
13) D.P.C தார்-1 லீற்றருக்கானது

**திரு.கா.ஆ.தியாகராசா**
**தலைவர்**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்.**

(சி-209)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


## மரண அறிவித்தல்

### திருமதி சிதம்பரப்பிள்ளை இலட்சுமி



புதுக்குடியிருப்பு 1-ம் வட்டாரத்தை நிரந்தர முகவரியாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிதம்பரப்பிள்ளை இலட்சுமி நேற்று (19.02.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சின்னர்-சிதம்பரப்பிள்ளையின் அன்புத் துணைவியாரும், அமரர்களான நாகமணி தெய்வானை ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், அமரர்களான சின்னர்-சேதிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், சபாரத்தினம், கனகரட்ணம் (அமரர்), செல்வரட்ணம் (புகையிரத கட்டட முகாமையாளர்), செல்வராணி, நவரட்ணம் (லண்டன்), வரதராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தி, சந்திராதேவி, யோகலக்சுமி, கந்தசாமி, உருத்திரா (லண்டன்), சியாமளா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரியதர்சினி, சுதர்சன், றாஜினி, தவகுமார் (அமரர்), ஜீவகுமார், நந்தகோபால் (கனடா), றயனா (மக்கள் வங்கி-கிளிநொச்சி), றொசாந்தன் (பொறியியல்துறை மாணவன்-மொறட்டுவ பல்கலைக்கழகம்), இளந்தீபன் (லண்டன்), மயூரன், சுஜந்தா (கலைப்பீடம்-யாழ்ப்பாணம்), டிலக்சன், சுஜந்தன் (லண்டன்), சிந்துயா (பிரான்ஸ்), மிதுசன் (பிரான்ஸ்), அக்ஷயா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20.02.2015) வெள்ளிக்கிழமை அவரது வீட்டில் காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0713525350

(சி-211)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் புரிந்தவர்கள் தப்பிக்க ஐ.நா.சபை காரணமாகிவிடக் கூடாது

## ராமதாஸ் வலியுறுத்து

(கொழும்பு)

**போர்க் குற்றங்களில் இருந்து இலங்கை அரசியல்வாதிகள் தப்பிக்க ஐக்கிய நாடுகள் சபை காரணமாகி விடக் கூடாது என பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை,

இலங்கை போர்க் குற்றங்கள் குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையம் நடத்திய விசாரணை அறிக்கை வரும் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படாது என ஆணையத்தின் தலைவர் கூறியிருக்கிறார்.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்துவதற்கான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

இதற்கு இலங்கை ஒத்துழைக்காத நிலையில், உலகெங்கும் இருந்து ஆதாரங்களைத் திரட்டி ஐ.நா. மனித உரிமை ஆணையக் குழு விசாரணை நடத்தியது.

இந்த விசாரணை அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி நடைபெறும் ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இதைத் தடுக்கும் முயற்சியில் இலங்கை, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஈடுபட்டிருப்பதும், அதற்கு இந்தியாவின் ஆதரவு கோரப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஐ.நா. விசாரணை அறிக்கை மூலம் போர்க் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், இந்த அறிவிப்பு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

போர்க் குற்ற விசாரணை தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையம் வழங்கிய அறிவுரைகளில் ஒன்றைக்கூட இலங்கை மதிக்கவில்லை. இந்நிலையில் விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதை 6 மாதங்களுக்கு ஆணையம் தள்ளி வைத்தது ஏன் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமாகும். இந்த தாமதத்தைப் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பிக்க அனுமதிக்கக் கூடாது.



இலங்கை மீதான போர்க் குற்றங்கள் தொடர்பாக அந்நாட்டுக்குள் சென்று விசாரிக்க ஐ.நா. மனித உரிமை ஆணையத்துக்கு அனுமதி அளிப்பதாக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படையாக அறிவித்தால் மட்டுமே அறிக்கைத் தாக்கலை தள்ளிவைக்க வேண்டும் என ராமதாஸ் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

## சாவகச்சேரி பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்-2015

10.02.2015ஆம் திகதிய பத்திரிகையில் வெளியான அறிவித்தலுக்கு மேலதிகமாக,கல்வித் தகைமையானது கீழ்வருமாறு அமையும்.

**கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத்தராதர, சாதாரணதரப் பரீட்சையில் 2 அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 2 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஒரு அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மேலும்,**

பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத நிலையில் சுகாதாரதொழிலாளி பதவிக்கான கல்வித்தகைமையாக 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் போதுமானதாக அமையும்.

விண்ணப்ப முடிபுத்திகதி 27.02.2015 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

செல்வி.தியாகராசா தர்சினி செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

திகதி:-20.02.2015 (சி-207)



உங்கள் குழந்தைகள்...
முறையான உச்சரிப்புடன் ஆங்கிலம்பேச விருப்பமா?
ஆங்கில சொற்களை முறையான உச்சரிப்புடன் வாசிக்க வேண்டுமா?
Mi Kids ENGLISH
பிரித்தானிய ஆங்கிலக்கற்கைநெறி
வயது 3 முதல் 12 வயது குழந்தைகளுக்கான கல்வித்திட்டமாகும்.
Mi kids பாடத்திட்டமானது நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக்கொண்டு புகழ் பெற்ற மொழியியல் மற்றும் ஒலிப்பியல் நிபுணர் டாக்டர் பேராசிரியர் ஜெரி நோல்ஸ் ஆல்உருவாக்கப்பட்டது.
வண்ணமயமான மல்டிமீடியா முறையில் ஓடியோ,வீடியோக்களுடன் கதைகள், இசை,நாடகம் மற்றும் பாடல்களை உள்ளடக்கிய கணனி மென்பொருளைக் கொண்டு இலகுவான வழியில் ஆங்கிலத்தை பயிற்றுவிக்கும் திட்டமாகும்.
துல்லியமாக ஆங்கிலச்சொற்களை உச்சரிக்கவும் சுயாதீனமாகஆங்கில வாக்கியங்களை வாசிக்கவும் ஆங்கிலமொழி மீது ஆர்வத்தைஅதிகரிக்கவும் இக் கற்கை நெறியானது உதவுகின்றது
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
DMI COMPUTER EDUCATION
மேலதிக விபரங்களுக்கு 777 24 07 07
பதிவுகளை அருகில் உள்ள பயிற்சிமையத்தில் மேற்கொள்ளவும்.
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் - No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403
நெல்லியடி - M. M. V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470
சாவகச்சேரி - கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் - 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970


## இராசி பலன்

20.02.2015
(மாசி 08, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
துதியை பின்னிரவு 1.55 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 4.30 மணிவரை
இராகுகாலம் 11.02-12.32 மணிவரை
சுபநேரம் 6.32-8.02 மணிவரை
இராமகிருஷ்ண பரம கம்சர் பிறந்ததினம்.

வளவன்

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம்,காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும்,சஞ்சலங்கள் கூடலாம்.

**மேடம்** வருமானம் உயர்வடையும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் சிறப்பினைக் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு,

**இடபம்** வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்,புதிய திட்டங்கள் கைகூடும்,புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள்,உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள்,பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள்,தேக நலனில் கவனம் தேவை,ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்,பிரயாண பயமுண்டு

**மகரம்** காணாமற்போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு,தேவையற்ற விவாத ங்களை தவிர்ப்பது நல்லது, தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**சிம்மம்** சொந்த பந்தங்களின் எதிர்பார்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, இறைவழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள்,கனவு பலிதமுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்,உடன்பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** முன்னேற்றம் பெற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு,குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறியுண்டு.

**துலாம்** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்,உடல் நலம் சீராகும், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 150**

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

...மக்கள் என்னிடம் அவர்களது எதிர்காலத்தைப் பற்றிய கேள்விகளுடன் வரும் பொழுது நான் அவர்களிடம் சொல்லுவேன் உங்கள் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று ஆருடம் சொல்வதற்காக என்னிடம் வராதீர்கள். உங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை வடிவமைத்துக் கொடுக்க என் உதவி வேண்டுமானால் என்னிடம் வாருங்கள். இந்த ஆருடங்களெல்லாம் பலவீனமான மனது உடையவர்களுக்கே என்பதில் மிகவும் தெளிவாக இருங்கள். பண்டைய காலத்தில் ஜோதிடம் ஒரு தூய அறிவியலாக இருந்தது. ஜோதிடம் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்று சொல்கிறேன். கடந்த காலத்தில் ஒரு குழந்தை குருகுலத்திற்கு ஒரு குருவிடம் கல்வி கற்க அனுப்பப்பட்டவுடன் அந்தக் குழந்தையின் இயல்பு எவ்வாறு இருக்கும் அதன் மனோபாவம் எவ்வாறு இருக்கும் அவனிடம் இருக்கும் இயல்பான திறன் என்ன என்பதைக் கணிப்பதற்கு ஜோதிடம் பயன்படுத்தப் பட்டது. அதற்கேற்றாற் போல் அவனுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இதைப் போன்றே முற்காலத்தில் சாதிப் பாகுபாடுகள் பிறப்பை அடிப்படையாகக் கொண்டதால் அவை ஒரு மனிதனின் குணநலன்களை ஒரு மனிதனில் இயல்பான திறமைகளை அடிப்படையாகக்கொண்டது.

ஒரு பையன் குருகுலத்தில் சேர்க்கப்பட்டவுடன் குரு அவனது இயல்பான சுபாவம் எப்படி இருக்கிறது. என்று பார்ப்பார். அவனிடம் அறிவுக்கூர்மை முக்கிய அம்சமான பிராமணத் தன்மை சார்ந்த சுபாவம் இருக்குமானால் அவனுக்கு வேத சம்பந்தமான நூல்களைப் படிப்பதற்கான வேத வித்யா தீட்சை கொடுக்கப்படும். அவனிடம் க்ஷத்ரிய இயல்புகளான வீரமும் பலமும் மிகவும் மேலோங்கி இருக்குமானால் அவனுக்குப் போர்க்கையில் பயிற்சி அளிக்கப்படும். அவன் பல திறமைகளைக் கொண்ட வைசிய குணநலங் களைக் காட்டுவானாயின் அவனுக்கு வியாபாரம். கற்றுத்தரப்படும். அவனிடம் ஒரே வேலையை சந்தோசமாகச் செய்து கொண்டிருக்கும் சூத்திர குணங்கள் இருக்குமானால் அவனுக்குப் பிறருக்குப் பயன்படும் வேலைகளைச் செய்யப்பயிற்சி அளிக்கப்பட்டது. நான்கு நான்கு பிரிவுகளுக்கு சம மதிப்பும் சம மரியாதையும் கொடுக்கப்பட்டது. ஜோதிடம் இதற்காகத்தான் பயன்படுத்தப்பட்டது. அது வாழ்க்கையை நிர்ணயம் செய்வதற்காக உபயோகப்படுத்தப்பட்ட ஒரு அறிவியல். இன்று உங்களைச் சுற்றிப் பாருங்கள். ஏறக்குறைய எல்லாரும் தவறான ' இடங்களிலேயே இருக்கிறார்கள். மருத்துவரின் இயல்பைக் கொண்ட ஒருவர் பொறியாளராகவும் பொறியாளர் இயல்பைக் கொண்ட ஒருவர் உதவியாளராகவும் இருக்கிறார்கள். அதனால்தான் சமூகத்தில் எல்லாமே குழப்பமாக இருப்பதாக ஒரு உணர்வு ஏற்படுகிறது. இயல்பாகவே வியாபாரத்தில் நாட்டமுள்ள ஒருவர் ஆன்மீகத்திற்குள் நுழைந்தால் என்ன நடக்கும்? ஆன்மீகம் வியாபாரமாகிவிடும்.

அப்பொழுது பண்டைய ஜோதிடம் ஒரு நிருபிக்கப்பட்ட அறிவியல் தானே ஸ்வாமிஜி?

அதுதான் எனக்குப் பயமாக இருக்கிறது. நான் ஆம் என்று சொன்னால் உடனே நீங்கள் அனைவரும் அதன்பின் ஓட ஆரம்பித்து விடுவீர்கள். நாளை காலை மக்கள் ஒரு நீண்ட வரிசையில் கையில் ஜாதகங்களுடன் என்னிடம் வந்து ஸ்வாமிஜி தயவுசெய்து இதை வெறுமனே பார்த்து எங்கள் எதிர்காலத்தைக் கணித்துச் சொல்லுங்கள். என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம் ஜோதிடத்தைப் பற்றி இவ்வளவு கவலைப்படாதீர்கள்!



விவேகனாந்தர் ஒரு முறை யாரோ அவரிடம் ஜோதிடத்தைப் பற்றிக் கேட்ட கேள்விக்கு மிகவும் பொருத்தமான ஒரு பதிலைக் கூறியிருக்கிறார். அவர் சொல்கிறார் போ, நன்றாக சாப்பிடு நன்றாக உடற் பயிற்சி செய். நன்றாகத் தூங்கு. நீ உடலளவிலும் மனதளவிலும் வலிமையானவனாகி விடுவாய். பிறகு இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்பட மாட்டாய்! *(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**



## அதிசய உலகம்

### ஒரே நேரத்தில் மூன்று சூரியோதயங்கள்! வியப்பில் மக்கள்



கீழ் வானத்தில் ஏற்பட்ட ஒளியின் மாயை காரணமாக ரஷ்யாவின் நகரொன்றில் இருக்கும் மக்கள் ஒரே நேரத்தில் மூன்று சூரியோதயங்களை பார்வையிட்டுள்ளனர். ரஷ்யாவின் மேற்கு நகரான செலியாபிஸ்கில் இவ்வாறு அடிவானத்தில் ஒரே நேரத்தில் மூன்று சூரியோதங்கள் ஏற்பட்டதை அங்குள்ள பலரும் படம்பிடித்து சமூகதளங்களில் பதிவேற்றியுள்ளனர். வானில் ஏற்பட்ட பனிக்கட்டி படிகங்கள் உருவாக்கும் ஒளி வட்டத்தில் சூரிய ஒளிபட்டுத் தெரித்த நிலையிலேயே இவ்வாறு காட்சி அளித்திருப்பதாக உள்ளூர் வானியல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். இந்த படிகங்களை தட்பவெப்பநிலை சுமார் -24 பாகையை எட்டு குளிரான காலை வேளையில் வெறுங்கண்ணால் பார்க்க முடியுமாக இருக்கும் என்று பிராந்திய வானிலை மையத்தின் தலைவர் கெலினா ஹெபொரென்கா குறிப்பிட்டுள்ளார். இந்த சம்பவத்திற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னரும் குறித்த நகரில் நீல நிறமான பனி மூடியிருந்ததை அங்கிருக்கும் மக்கள் கண்டுள்ளனர். இந்த பனிமூட்டம் குறித்து ஊர்மக்கள் அச்சமடைந்த நிலையில், தொழிற்சாலை ஒன்றில் பயன்படுத்திய நிறச்சாயமே இவ்வாறு காற்றில் கலந்திருப்பது பின்னர் கண்டறியப்பட்டுள்ளது. சைபீரியா பகுதிக்கு வாயிலாக அமைந்திருக்கும் இந்த செலியாபிஸ்கி நகர் இவ்வாறான அசாதாரண நிகழ்வுகளுக்கு பழகிப்போயுள்ளது. இந்த நகரில் தான் 2013 ஆம் ஆண்டு 570 கிலோகிராம் விண்கல் ஒன்று விழுந்து 900க்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமைப்போம் சுவைப்போம்

### தக்காளி காய் கனி சுஜி



**தே.பொருட்கள்:-**

தக்காளிக்காய்- 4,
நாட்டுத் தக்காளிப் பழம்- 2,
பெரிய வெங்காயம் ஒன்று,
ஊற வைத்து, வேக வைத்த கறுப்புக் கொண்டைக் கடலை 1/4கப்,
பூண்டு- 3 பல்,
மிளகாய்த்தூள் ஒருடேபிள் ஸ்பூன் (அல்லது காரத்துக் கேற்ப),
கொத்தமல்லித்தழை சிறிதளவு, கரம்மசாலாத்தூள் ஒரு டீஸ்பூன், எண்ணெய்- 2 டேபிள்ஸ்பூன், உப்பு தேவைக்கேற்ப. அரைத்துக்கொள்ள: பச்சை மிளகாய் - 2, தேங்காய்த் துருவல் அரை கப், இஞ்சி ஒரு சிறிய துண்டு (தோல் சீவவும்), பொட்டுக்கடலை -2 டேபிள்ஸ்பூன்.

**செய்முறை:**

அரைக்க கொடுத்தவற்றை விழுதாக அரைக்கவும். வாணலியில் இரண்டு டேபிள்ஸ்பூன் எண்ணெய் ஊற்றி... நறுக்கிய வெங்காயம், பூண்டு சேர்த்து வதக்கி, நீளவாக்கில் நறுக்கிய தக்காளிக்காய், தக்காளிப் பழம், மிளகாய்த்தூள் சேர்த்து மேலும் வதக்கி, உப்பு சேர்த்து 2 டம்ளர் நீர் விட்டு வேகவிடவும். பாதி வெந்ததும், கொண்டைக்கடலையை சேர்க்கவும். எல்லாமாகச் சேர்ந்து வெந்ததும் அரைத்து வைத்த விழுதைச் சேர்க்கவும். மீண்டும் ஒரு கொதி வந்ததும் இறக்கி கரம்மசாலா சேர்த்து கலந்து விடவும். கொத்தமல்லித்தழை தூவி அலங்கரிக்கவும். இது சப்பாத்தி, நாண், பரோட்டா முதலியவற்றுக்கு சிறந்த சைட்டிஷ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலைத் தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றம்

(கரணவாய்)

**இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்ற வடக்கு மாகாண சபையின் ஏகமனதான தீர்மானத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக வடமராட்சி கரவெட்டிப் பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற மாதாந்த கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உடுப்பிட்டித் தொகுதி ஆளும் கட்சி உறுப்பினர் மதியரசன் இந்தத்தீர்மானத்தை முன்மொழிந்தார்.

மேற்படி தீர்மானம் சபையில் முன்மொழியப்பட்டதைத் தொடர்ந்து வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. பிரதேச சபை தவிசாளர் பொ.வியாகேசு தீர்மானம் தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைத்ததுடன் சபை உறுப்பினர்களும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டனர்.

இறுதியில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இணைந்து இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்ற தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழர்களுக்கு எதிரான இலங்கையில் இனப்படுகொலை என்ற தீர்மானம் கடந்த 10ஆம் திகதி வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த இனப்படுகொலை தொடர்பான பிரேரணையை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சமர்ப்பித்திருந்தார்.

இந்தத் தீர்மானம் உண்மையை எடுத்துரைக்கும் ஆவணம் என முதலமைச்சர் குறிப்பிட்டதுடன் துறைசார் புத்திஜீவிகளின் பங்களிப்புடன் இது உருவாக்கப்பட்டிருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் உயிரிழந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் வீரபாகு கனகசுந்தர சுவாமிக்கு நேற்று சபையின் கூட்டத் தொடரில் பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 5 நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-3-60)

# வீடமைப்பு அமைச்சில் பாரியளவில் ஊழல், மோசடி இடம்பெற்றுள்ளது

## சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

(கொழும்பு)

வீடமைப்பு அமைச்சில் பாரியளவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக தற்போதைய வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். இவ்வளவு காலமும் வீடமைப்பு அமைச்சில் நடுப்பகலில் மக்கள் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மக்கள் வீடுகளை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டிய பாரியளவு பணத்தை கடந்த அரசாங்கம் பிரசாரத்திற்காக பயன் படுத்தியுள்ளது. தேர்தல் காலத்தில் கடுமையான மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

அரச பொறியியலாளர் திணைக்களத்தில் மட்டும் 33 வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தி தேர்தல் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது. வீடமைப்பு அதிகார சபை 15 வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

இந்த பாரிய கொள்ளைகளை நான் தடுத்து நிறுத்தினேன் என சஜித் பிரேமதாச நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சராக விமல் வீரவன்ச கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

உசன்- மிருசுவில்

திரவிய அபிஷேக ஸ்கந்த ஹோம மஹாயக்ஞம்

22.02.2015 ஞாயிற்றுக்கிழமை

ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

"அருள்வாக்குச் சித்தர்"

குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள்

(பிரதமகுரு உசன் கந்தசுவாமி கோவில்)

தலைமையில் பல சிவாச்சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

இப்புண்ணிய கைங்கரியத்தில் பங்குபற்றி சங்கற்பித்து உலக நன்மைக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட விரும்பும் அடியார்கள் பிரதம குருக்கள், தர்மகர்த்தாவுடன் தொடர்புகொண்டு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து கொள்ளலாம். அபிஷேக. ஹோமபூஜை. அன்னதானம் என்பவற்றுக்குரிய பொருட்களை உபகரித்து திருவருட்பேறு பெற்றுய்வீர்களாக.

குறிப்பு:- அன்றைய தினம் இல.769 வழி இ.போ.ச.பஸ் மற்றும் தனியார் சிற்றூர்திச் சேவை யாழ்ப்பாணம்- உசன்-யாழ்ப்பாணம் இடம்பெறும்.மாற்றுவலுவுள்ளோர்களுக்கான உதவியும் ஆலயத்தில் வைத்து வழங்கப்படும்.

MR.R.KETHEESWARA SARMA

COMMERCIAL BANK-JAFFNA

A.C.NO:8600921092

பிரதமகுரு தொ.பே.எண்:- 077 723 8561

நிகழ்வுகளை (www.usankanthan.com) பார்வையிடலாம்

மயிலேறு பெருமான் திருவடி போற்றி!

உசன் பதிக்குமர வேலவா போற்றி!

மங்களம்.

உசன், மிருசுவில். 20.02.2015

இங்ஙனம் ஆலய தர்மகர்த்தா.

விளம்பர அனுசரணை

'சிவாகம கிரியா திலகம்'

வை.கு.ஜெயசுதக் குருக்கள்

வீட்டுச் சாந்தி பூசைகள், திருமண வைபவங்கள், கோவில் கும்பாபிஷேகங்கள், நிலையம் எடுத்தல்

ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி கோவில், நெடுங்கேணி.

T.P.077 658 7121


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 288

துளசி துளசிகா




சங்கீதா பசுபதி




விஜயநாத் விஜய்




சஞ்சீவ் சஞ்சீவஃ




சாதனா சாந்தரூபன்




மோகனரூபன் மோதனதாஸ்

கைகால் நல்லாத்தானே இருக்கு
உழைச்சு வாழ வேண்டியது தானே
என பிச்சைக்காரனிடம் கூறுகிறோம்.
அதே வார்த்தையை
**கோவிலில் சாமி எத்தனை முறை**
**எம்மிடம் சொல்லியிருக்க**
**வேண்டும்....**

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகர்கள் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தியாக வேண்டும்!

(யாழ்ப்பாணம்)

அனைத்து வியாபார நிலையங்களிலும் நுகவோர் நலன்கருதி விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் என நுகர்வோர் அதிகாரசபையின் யாழ்ப்பாண இணைப்பதிகாரி த.வசந்தசேகரன் அறிவித்துள்ளார்.

குறிப்பாக தற்போது சிற்றுண்டிச்சாலைகளில் கோதுமை மாவிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவு வகைகள் மற்றும் சிற்றுண்டிகள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்.வர்த்தக சங்கம் மற்றும் சிற்றுண்டி உரிமையாளர் சங்கம் என்பவற்றின் தீர்மானத்திற்கு அமைய விலைக்குறைப்புச் செய்யப்பட்ட இவ்வுணவுப் பொருட்கள் சில சிற்றுண்டிக் கடைகளில் விலைக்குறைப்புச் செய்யப்பட்ட விலைகளிலும் ஏனைய சில கடைகளில் பழைய விலைகளிலும் விற்பனை செய்யப்பட்ட வருகின்றன.

இந்நிலையில் நுகர்வோருக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு உணவுப் பொருட்களின் விலைப்படியல் வியாபார நிலையங்களில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த மாதம் விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படாத மூன்று வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் வியாபார நிலைய உரிமையாளர்களிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-3)




# உபதபாலதிபரின் தங்கச்சங்கிலி மண்கும்பானில் நேற்று அறுப்பு!

## நூதனமுறையில் திருடன் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் உபதபாலகத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த உப தபாலதிபரின் தங்கச் சங்கிலி திருடன் ஒருவரினால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

உப தபாலதிபர் கடமையில் இருந்த போது உப தபாலகக் கட்டடம் மீது கற்கள் வீசப்பட்டுள்ளன.

சிறிது நேர இடைவெளியில் கற்கள் தொர்டர்ச்சியாக வீசப்படுவதை அவதானித்த உப தபாலதிபர் அலுவலகத்திற்கு வெளியே வந்துள்ளார்.

இதன்போது முகத்தை மறைத்தவாறு உப தபாலக கட்டடத்திற்கு முன்பாக உள்ள ஆட்கள் இல்லாத வீட்டிலிருந்து வெளியே வந்த திருடன் உபதபாலதிபரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும் அவர் வைத்திருந்த பெறுமதியான கையடக்கத் தொலைபேசியையும் பறித்துச் சென்றுள்ளான்.

இதன்போது திருடன் உப தபாலதிபரை கத்தியால் குத்த முற்பட்ட போது அவர் அதனைத் தடுத்ததால் கையில் சிறிய காயங்களுடன் தப்பிக் கொண்டார்.

சாட்டி கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மண்கும்பான் உப தபாலகத்தின் முன் ஆள்நடமாட்டமற்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருடன் முகத்தை மறைத்தவாறு வந்த துணியை விட்டுச் சென்றுள்ளதால் மோப்பநாயின் உதவியுடன் ஊர்காவற்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சுவிஸ் நாட்டிலிருந்து வந்த 56 வயதுடைய நபர் ஒருவர் கரவெட்டி கிழக்கில் வசிக்கும் பெண் ஒருவரை திருமணம் செய்ய முற்பட்ட வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிர்வரும் 27 ஆம் திகதிவரை பிரஸ்தாப நபரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

பிரஸ்தாப நபரிடமிருந்து தகவல் எதனையும் பெறமுடியவில்லையென குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணையின் முன்னேற்றம் குறித்து நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்தே நீதிபதி விசாரணையை ஒத்தி வைத்துள்ளார். இதேவேளை காங்கேசன்துறையிலுள்ள குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் பெண்ணும் தந்தையும் ஏற்கெனவே வாக்குமூலம் அளித்திருந்தனர்.

இதன் அடிப்படையில் மேலதிக விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் ஆரம்பித்திருந்தனர். எனினும் விசாரணைகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை எனவும் பிரஸ்தாப நபரிடமிருந்து தகவல் எதனையும் பெற முடியாதுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-60)

# அகிலஇலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவராக சைவப் புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் சங்கத்தின் உபதலைவர்களாக சைவப்புலவர் சு.செல்லத்துரை, சைவப்புலவர் சா.தில்லைநாதன், செயலாளர் சைவப்புலவர் க.நித்தியதசீதரன், உபசெயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன், பொருளாளர் சைவப்புலவர் சி.நந்தகுமார், தேர்வுச்செயலாளர் சைவப் புலவர் க.தேவமனோகரன், உப தேர்வு செயலாளர் சைவப்புலவர் ச.முகுந்தன், சமய பிரசாரச் செயலாளர்கள் சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன், சைவப்புலவர் திருமதி சறோஜினிதேவி சிவஞானம், சைவப்புலவர் திருமதி சிவானந்த ஜோதி ஞானசூரியம், சைவப் புலவர் திருமதி ஞா.ஞானலோகேஸ்வரி, சைவப்புலவர் செ.நவநீதகுமார், சைவப்புலவர் கி.வெள்ளைச்சாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக சைவப்புலவர் திருமதி பத்மா தங்கராசா, சைவப்புலவர் தி.சதானந்தன், சைவப்புலவர் அ.பரசுராமன், சைவப்புலவர் வ.தயாபரசிவம், சைவப்புலவர் திருமதி கவிதா கதிரமலை, சைவப் புலவர் திருமதி சியாமினி தவபாலன், சைவப்புலவர் திருமதி உருத்திராதேவி பகீரதன், சைவப் புலவர் செல்வி ஆனந்தி ஜெயரட்ணம், சைவப்புலவர் திருமதி சணமுகவடிவு தில்லைமணி, சைவப்புலவர் சா.பொன்னுத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

மேற்படி சங்கத்தின் முதலாவது செயற்குழுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்தச் செயற்குழுக் கூட்டத்தில் 2015ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் இளஞ்சைவப் புலவர் தேர்வு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-21)




# தமிழ் விடுதலைக் கூட்டணியின் அரசியல் கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

ஈழத்துக் காந்தி தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பாதுகாப்போம் என்ற கருப்பொருளிலான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இலக்கம் 1077, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் இன்று நம் நாட்டில் ஏற்பட்டுள்ளஅரசியல் தலைமை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் எதிர்காலம் இவை சம்பந்தப்பட்ட வேறு பல விடயங்கள் என்பன கலந்துரையாடப்படவுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார். (இ-3)

# 24 வர்த்தகர்களுக்கு நீதிமன்றம் அபராதம்

கடந்த ஜனவரி மாதம் 24 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் 21 வழக்குகள் முடிவுறுத்தப்பட்ட நிலையில் 1 இலட்சத்து 39 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படாமை தொடர்பாக மூன்று வழக்குகளும், காலாவதியான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாக 14 வழக்குகளும் உற்பத்தி விபரம் இல்லாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட விற்பன்ன சம்பந்தமாக ஒரு வழக்கும் அதிகூடிய விலைக்கு விற்றமை சம்பந்தமாக ஒரு வழக்கும் ஏமாற்றும் நோக்கத்தோடு இடம்பெற்ற விற்பனை தொடர்பாக 5 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில் இவற்றில் 21 வழக்குகளின் விசாரணைகள் முடிவுற்ற நிலையில் சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

அநேகமான வழக்குகள் சண்டிலிப்பாய் பகுதியில் இருந்து பதிவு செய்யப்பட்டுள்ளன. 11 வழக்குகள் அங்கு பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-60)

# மெய்வல்லுநர் போட்டி இன்று

யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.தயானந்தராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர் ஆர்.சி.இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி செல்வகுமாரி இராமநாதன் வழங்கி வைப்பார். (இ-3)

# எழுவைதீவு துறைமுகத்தை யார் புனரமைப்பது?

## மக்கள் கேள்வி



எழுவைதீவு இறங்குதுறை முற்றாகச் சேதமடைந்துள்ளதால் மக்களின் போக்குவரத்து அச்சம் நிறைந்ததாக காணப்படுகின்றது.

மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையான இத்துறைமுகம் சேதமடைந்து நீண்டகாலம் ஆகின்ற போதும் இன்னமும் திருத்தப்படாமல் காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

இதனால் புனரமைத்து தமது போக்குவரத்தை இலகுபடுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாத் சாலி இனி நடமாடும் 'சடலம்'

## கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

**இன்றைய பொதுக் கூட்டத்துக்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை ஒன்று திரட்டி காட்டுங்கள் என அசாத் சாலி சவால் விடுத்தார். ஆனால் ஐந்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து கூடியிருக்கின்றனர். இதைப் பார்த்த பிறகும் அவர் அரசியலில் ஈடுபடுவார் என்றால் அவர் நடமாடும் சடலத்துக்கு ஒப்பாவார் என தெரிவித்த மேல்மாகாண சபை உறுப்பினர் உதய கம்பன்பில , மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க மெதமுலனவுக்கு கேட்கும் வகையில் கூட்டாக குரலெழுப்ப வேண்டும் எனவும் தெரிவித்தார்.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து நுகேகொட பகுதியில் பொது கூட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

"மகிந்தவுடன் நாட்டை வெல்வோம்" எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளி கட்சிகளினால் குறித்த பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவை பிரதிபலிக்கும் வகையில் மக்கள் கூட்டம் கூடியிருக்கின்றது. எதிர்காலத்தை மாற்றியமைக்கும் சாட்சியாக இது காணப்படுகின்றது.

நல்லாட்சி என்ற பெயரில் நாடு பயங்கரவாதத்தை நோக்கி பயணித்து கொண்டிருக்கின்றது. இந்த அச்சுறுத்தலான நிலைமையினை மாற்றியமைக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கும் வரவேண்டும். இதனைத் தெளிவுபடுத்தவே இங்கு மக்கள் வெள்ளம் திரண்டுள்ளது.

இன்றைய கூட்டத்திற்கு முடியும் என்றால் 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை ஒன்று திரட்டி காட்டுங்கள் என அசாத் சாலி சவால் விடுத்தார்.

இங்கு வரவுள்ள மக்கள் கூடடத்தின் எண்ணிக்கையை கணக்கெடுக்க அவருக்கு நான் அழைப்பு விடுத்திருந்தேன். ஆனால் தலைமைத்துவம் அவருக்கு அனுமதி வழங்கியிருக்காது. இந்த மக்கள் கூட்டத்தை பார்த்த பிறகும் அவர் அரசியலில் ஈடுபடுவார் என்றால் ஒரு நடமாடும் சடலத்துக்கு ஒப்பா வார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது அன்னத்திற்கு வாக்களித்தால் விடுதலைப் புலிகளின் இயக்கம் உயிர் பெறும் என அறிவித்தோம். அதன் தரிசனத்தை தற்போது நாம் காண்கின்றோம்.

மேலும் 100 நாள் வேலைத் திட்டம் என்ற பெயரில் அரசாங்கம் நகைச் சுவையான விடயங்களை அரங்கேற்றி வருகின்றது.

கொத்த மல்லியின் விலையை குறைத்துள்ளது. இதற்கான காரணம் யாருக்கும் தெரியாது. ஏனென்றால் சரவதேசத்துடன் இணைந்து மறை முகமாக விடுதலை புலி பயங்கரவாதத்தை கட்டியெழுப்பி வருகின்றது இந்த அரசாங்கம். எதிர்காலத்தின் இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை பார்க்கும் போது நாட்டு மக்களுக்கு காய்ச்சல் பிடிக் கும்.

எனவே ஒவ்வொரு நாள் காலையிலும் கொத்தமல்லி குடித்தால் காய்ச்சல் குறையும் என்பதற்காகவே கொத்தமல்லியின் விலையை குறைத்துள்ளது.ரணில் விக்ரமசிங்க புலிகளுக்கு முழு ஆதரவை வழங்கி வருகின்றார். இவருடைய இடத்திற்கு மகிந்த ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும். இதற்கு மக்கள் முழு ஆதரவை வழங்க வேண்டும்.

இறுதி யுத்தத்தின் போது இனப் படுகொலையே மேற்கொள்ளப்பட்டது என வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணை நிறைவேற்றப் பட்டது.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த எமது தலைவர் மகிந்த ராஜபக்ஷவை சர்வாதிகாரி ஹிட்லருக்கு சமமாக பேசியிருக்கின்றார். மேலும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் ஹிட்லருக்கு சமமாக வர்ணித்துள்ளார். இவ்வாறான ஒரு நிலையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து நல்லாட் சியை ஏற்படுத்த முடியும்.

புலிகள் நாட்டை சீரழிப்பதற்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வந்து நாட்டை பாதுகாக்க வேண்டும். இதற்காக அனைவரும் கூட்டாக குரல் கொடுக்க வேண்டும். நாம் எழுப்பும் சத்தம் மெதமுலன பகுதிக்கு கேட்க வேண்டும். மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்க நாட்டு மக்கள் அனைவரும ஒன்றுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இனவாதிகளின் கூட்டமொன்றே நுகேகொடையில் நடைபெற்றது

## அசாத்சாலி காட்டம்



(கொழும்பு)

நுகோகொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஓர் இனவாத அடிப்படையிலான கூட்டமாகும் என மத்திய மாகாண ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அரசியல் கூட்டமொன்றுக்கு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை திரட்டுமாறு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவிற்கு சவால் விடுத்திருந்தேன்.

எனினும் நுகோகொடயல் நடைபெற்ற கூட்டமானது ஓர் இன வாத அடிப்படையிலான கூட்டமே யாகும்.

பொதுபல சேனா உள்ளிட்ட அமைப்புக்கள் சமூக வலைத் தளங்களின் ஊடாக இந்தக் கூட்டத்திற்கு இனவாத அடிப்படையில் அழைப்பு விடுத்திருந்தது.

இனவாத அடிப்படையில் அன்றி அரசியல் ரீதியாக மக்களை திரட்டியிருந்தால் நான் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வதாக விடுத்த சவாலை ஏற்றுக் கொண்டிருப்பேன்.

இந்தக் கூட்டம் அரசியல் ரீதியான கூட்டமன்று, இது முழுக்க முழுக்க ஓர் இனவாத அடிப்படையிலான கூட்டமாகும்.

இனவாதத்தை தூண்டும் வகையிலான அறிக்கைகளை விட்டு மக்கள் திரட்டப்பட்டுள்ளனர்.

விமல் வீரவன்ச தனது காரியாலயத்திலிருந்து அரசியல் ரீதியான கூட்டமொன்றுக்கு ஐயாயிரம் பேரை அழைத்திருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியும்.

தனியார் பேருந்துகளில் இனவாத அடிப்படையில் மக்களை அழைத்து நடத்தப்படும் கூட்டங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அசாத் சாலி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

நுகோகொடயில் நடை பெறும கூட்டத்திற்கு ஐயாயிரம் பேரை அழைத்து வந்தால் அரசியலிலிருந்து விலகுவதாக முன்னர் அசாத் சாலி சவால் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தான் மக்களின் நம்பிக்கையினை பொய்யாக்க விரும்பவில்லையாம்

## மகிந்த மக்களுக்கான செய்தியில் சுட்டிக்காட்டு



மக்கள் என்மீதும் எனது ஆற்றல் மீதும் வைத்துள்ள நம்பிக்கையினை நான் பொய்யாக்க விரும்பவில்லை, நாட்டுக்காக சிந்திக்கும் அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்களின் எதிர்பார்ப்புகளை ஒதுக்கி விட்டு என்னால் செயற்பட முடியாது என நேற்று முன்தினம் நுகேகொடயில் இடம்பெற்ற தனக்கு ஆதரவான கூட்டத்திற்கு மகிந்த அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி அனுப்பி வைத்திருந்த செய்தியினை கலாநிதி தயான் ஜயதிலக வாசித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என்னை நம்பி வாக்களித்த மக்கள் இன்று எனக்காக இந்த கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர் .நீங்கள் அனைவரும் என் மீதுள்ள நம்பிக்கையில் இக் கூட்டத்திற்கு வந்துள்ளீர்கள். உங்கள் அனைவரையும் நான் எப்போதும் மதிப்பவனாகவே நடந்துகொள்கின்றேன்.

கடந்த காலத்தில் எனது கட்சியில் நல்ல பல நண்பர்கள் என்னுடன் இருந்தனர். ஆயினும் இறுதி நேரத்தில் ஒரு சில ஆசைகளுக்காக என்னை விட்டு போய்விட்டார்கள். அதேபோல் இன்று அமைந்துள்ள அரசாங்கம் கூட உண்மையாக மக்களின் முழுமையான ஆதரவுடன் அமைந்த அரசாங்கம் அல்ல.

இன்று அமைந்துள்ள ஆட்சி முற்றிலும் சூழ்ச்சியால் அமையப் பெற்றுள்ள மோசமான ஆட்சியே. இதில் நான் தோற்க வில்லை.

அதேபோல் இப்போது எமக்கு ஏற்பட்டுள்ள சரிவு நிரந்தரமானதும் அல்ல . எனது மக்கள் இன்றும் என்னுடன் உள்ளனர் ஆட்சி மாறினாலும் ஆதரவாளர்கள் என்னுடன் இருப்பது எனக்கு முழுமையான பலமாகவே இருக்கும். கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மக்கள் என்னை நாட்டின் தலைவனாக மாற்றினர். அவர்கள் என்னை நம்பியதன் காரணத்தினால் முப்பது வருட காலம் நிலவிய பயங்க ரவாத சூழலை மாற்றியமைத்து மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்தேன்.

அதற்காகவே 2009 ஆம் ஆண்டு தேர்தலில் மக்கள் மீண்டும் என்னை தலைவனாக்கினர். அதன்பின்னர் கடந்த ஐந்து ஆண்டுகளாக நாடு பாரிய அபிவிருத்தி செயற்பாடுகளில் நல்ல முன்னேற்றம் கண்டது.

எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் எனக்கு எதிராக பல சூழ்ச்சகளை மேற்கொண்டு என்னை தோற்கடித்தனர். ஆனால் இது எனக்கு கிடைத்ததோல்வி யாக நான் நினைக்கவில்லை. இந்த தோல்வி எம்மை சாராது

அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை நான் ஒருபோதும் சீரழிக்க நினைக்கவில்லை, எனது தலைமையில் கட்சியை பலப்படுத்தவே செயற்பாடுகளை முன்னெடுத்தேன். இப்போதும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து கட்சியை பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

யாரும் எமது கட்சியை சீரழிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திவிடக் கூடாது. இன்று நாம் அனுபவிப்பது தோல்வியை அல்ல. இது சூழ்ச்சியின் பிரதிபலனை. தோல்வியை தோல்வியாக ஏற்க நான் எப்போதும் தயங்கியதில்லை . அவமானம் என்பது எனக்கு பழக்கமில்லாத ஒன்றல்ல. சிறையும் எனக்கு பழக்கமானது. எனது மக்களுக்காக நான் அனைத்து துன்பங்களையும் அனுபவித்தவன்.தோல்வியடையாத எமக்கு ஆட்சி அதிகாரம் இல்லாமல் போயிருந்தாலும் சகலரது குடையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே .

மக்கள் என்மீதும் எனது ஆற்றல் மீதும் வைத்துள்ள நம்பிக்கையினை நான் பொய்யாக்க விரும்பவில்லை. நாட்டுக்காக சிந்திக்கும் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் மக்களின் எதிர்பார்ப்பு களை ஒதுக்கி விட்டு என்னால் செயற்பட முடியாது . மக்களின் நன்மைக்காக நான் ஆரோக்கியமான செயற்பாடுகளையே மேற்கொள்வேன் எனவும் அவரின் செய்தியில் மேலும் தெரிவித்திருந்தார். (இ-3)

# இலங்கையருக்கு மரண தண்டனை சவுதிக்கு விஜயம் செய்யும் ஹக்கீம்

(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீம் சவுதி அரேபியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

சவுதி அரேபியாவில் மரண தண்டனையை எதிர்கொண்டுள்ள இலங்கைப் பிரஜைகள் மூவர் தொடர்பாக அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவே இவர் சவுதிக்கு விஜயம் செய்யவுள்ளதாக சவுதி அரேபியாவிலுள்ள இலங்கை தூதரக ஆலோசகர் ஆதம் பாவா உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

சவுதி செல்லவுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம் மரண தண்டனையை இரத்து செய்து தண்டனை காலத்தை குறைப்பது தொடர்பில் அந்நாட்டு அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் யேமன் நாட்டுப் பிரஜை ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச் சேர்ந்த 6 பேரும், இந்தியாவைச்சேர்ந்த ஐவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையர்கள் மூவருக்கு மரண தண்டனை விதித்து அந்நாட்டு ஜெத்தா நீதிமன்றம் தீர்ப்பளிதத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் திட்டங்களை இடைநிறுத்தியது ஏன்?

**(கொழும்பு)**

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது தொடர்பில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

23/2 நிலையியல் கட்டளையின் கீழ் சபையில் எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

கடந்த அரசாங்கம் கிராமிய மட்டத்தில் ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டங்கள். உட்டகட்டமைப்பு அபிவிருத்தி. வீதி. மின்சார வசதித் திட்டங்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த வருடம் ஆரம்பிக்கப்படவிருந்த திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. அபிவிருத்தித் திட்டங்களை இடைநிறுத்துமாறு மாவட்ட செயலாளர்களுக்கு சுற்றுநிருபம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பலர் தொழில் இழந்துள்ளனர். இது குறித்து அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நுகேகொடை கூட்டம் வெற்றியளித்துள்ளது

(கொழும்பு)

நுகேகொடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட கூட்டம் வெற்றியளித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். அக்கூட்டம் வெற்றிலையின் பலத்தை பிரதிபலித்திருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளராக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தனது கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் தனது கடமைகளை நேற்று வியாழக்கிழமை பொறுப்பேற்று கொண்டதன் பின்னர் அங்கிருந்த ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளராக தெரிவு செய்யப்பட்ட எஸ்.பி நாவின்னவும் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். நுகேகொடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட கூட்டம் வெற்றியளித்துள்ளது. அந்த கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த கூட்டத்துக்கு செல்வது தொடர்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவேண்டியிருந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


# சேவைநலன் பாராட்டுவிழா

அகவை அறுபதில் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

**இராசரத்தினம் பாலசுப்பிரமணியம்**
**(அலுவலகப்பணியாளர்–பூநகரிக்கோட்டம்)**



பாடசாலை: தரம் 1 - தரம் 8 வரை
கிளி/ செட்டியகுறிச்சி அ.த.க.பாடசாலை
தரம் 9- தரம் 11 வரை கிளி/ பூநகரி மத்திய கல்லூரி

சேவைகள்: 1974-1998 பூநகரி ப.நோ.கூ.ச (காசாளர் ,காகிதகப்பொறுப்பாளர் ,கிளை முகாமையாளர், இலிகிதர் , கணக்குப்பதிவாளர், உள்ளகக்கணக்காய்வாளர், கணக்காளர் , பதில் பொதுமுகாமையாளர்) 1998.08.05 - 1999.12.08:
கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம். (அலுவலகப்பணியாளர்)
1999.12.09- 1999.03.08 :கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் (அலுவலகப்பணியாளர்)
1999.03.09 -2015.02.20
கோட்டக்கல்விப்பணிமனை, பூநகரி
(அலுவலகப்பணியாளர்)

காலத்தின் வேளைதனில்–ஞாலத்தின்
வளைவுகளிலெல்லாம்–நீவீர்
நடந்தீர்
அகவை அறுபதிலும் நேர் கொண்ட– பார்வைதனில்
பக்குவமாய் "பாலா" எனும் நாமம் கொண்டீர்.
கள்ளமில்லா வெள்ளை மனசு கொண்டு–பூநகரி
மண்ணின் கல்வித்தாயின்–பணியாளனாய்
பக்குவமாய் பணிந்தீர்–பார்
போற்றும் இந்நன் நாளில்– உம் சேவைதனை
நாமும் போற்றி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
கோட்டக் கல்விப்பணிப்பாளர் ,
அதிபர்கள் , ஆசிரியர்கள் ,
கல்விசார உத்தியோகத்தர்கள்.
பூநகரிக்கோட்டம்.

இந்நிகழ்வு கிளி. பூநகரி, நல்லூர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.


# பேசும் படம் - 30



பசி தாங்க முடியல்ல. இந்த "மவுசை" யாவது அமுக்கிட வேண்டியதுதானே...

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

**மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com**
**facebook: www.facebook.com/valam.puri.1**

**தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,**
**இல.03, 2-ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**அல்லது நேரில்.**

**அனுப்பியவர்:**
**சுதன்,**
**கொடிகாமம்.**

# புனரமைப்புக்காக போடப்பட்டிருந்த கற்கள் விற்பனை செய்யப்படுவதாக குற்றச்சாட்டு

(பொற்பதி

வடமராட்சி கிழக்கில் வீதிப்புனரமைப்பிற்காகப் பறிக்கப்பட்ட கிரவல், கருங்கல், சல்லி என்பன இரவோடு இரவாக களவாக ஏற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, வடமராட்சி கிழக்கில் பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு உட்பட மருதங்கேணி நாவலடிச் சந்தியில் இருந்து உடுத்துறை மகா வித்தியாலயம் வரைக்குமான சுமார் மூன்றரைக் கிலோமீற்றர் நீளமான வாரிவிட்டான் வீதியானது பல வருட காலமாகத் திருத்தப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியை முற்று முழுதாகத் திருத்தம் செய்வதற்காக வடமராட்சி கிழக்குப் பிரதேசம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தகாரரிடம் கொடுக்கப்பட்டது.

எனினும் ஒப்பந்தகாரர்களால் வீதி புனரமைப்புச் செய்வதற்காக உள்ளீட்டுப் பொருட்கள் வீதியோரங்களில் 2011 ஆம் ஆண்டு பறிக்கப்பட்டுள்ளன.

இருந்தும் ஒப்பந்தகாரர்களின் வேலைச் செயற்றிறன் இன்மை காரணமாக இன்றுவரைக்கும் இந்த வீதியின் புனரமைப்பு வேலைகள் எதுவும் இடம்பெறவில்லை.

மேலும் வீதி வேலைகளுக்காகப் பறிக்கப்பட்டுள்ள கிரவல், கருங்கல், சல்லி என்பன சில இடங்களில் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளன. இதனால் விபத்துக்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இதனைவிட இவ்வாறு பறிக்கப்பட்டுள்ள கிரவல், சல்லி, கருங்கல் என்பன உழவியந்திரங்களில் களவாக ஏற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கிரவல் ஒரு உழவியந்திரப் பெட்டி 2 ஆயிரம் ரூபாவுக்கும் கருங்கல் 5 ஆயிரம் ரூபாவுக்கும் சல்லி 7 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான தகவல்களை அப்பகுதி மக்கள் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திற்கும் அதன் உப அலுவலகமாகிய செம்பியன்பற்று பிரதேச சபை அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியும் இந்நிலை தொடர்வதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலைமை தொடர்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்புகள் கண்டும் காணாததும் போல் இருப்பது ஏன் என்று பொதுமக்கள் மேலும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்துடன் இதனைத் தடுத்து நிறுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் திருட்டுப்போகும் கற்களை விற்பனை செய்யும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-64)

# யாழ்ப்பாண மாவட்ட அறநெறி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

எமது திணைக்களத்தினால் வருடந்தோறும் அறநெறி ஆசிரியர்களுக்கான இறுதி நிலைக் கருத்தரங்கு நடத்தப்படுவது வழமையாகும்.

இந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை 21 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் 4.00 மணி வரை யாழ்ப்பாணம் நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் (சட்டநாதர் கோவிலடி,பருத்தித்துறை வீதி) நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் இறுதிநிலைப் பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகளும் இந்து சமய பொது அறிவுப்போட்டிமாணவர்களின் பாடத்திட்ட மாற்றம்,ஆசிரியர்களின் வருடாந்த கொடுப்பனவு, சீருடை வழங்கல் மற்றும் இவ்வருடத்திற்கான யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கான உதவிகள், செயற்திட்டங்கள் சம்பந்தமானவிடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே அனைத்து அறநெறி பொறுப்பாசிரியர்களையும், ஆசிரியர்களையும் தவறாது கலந்து பயன்பெற்றுக்கொள்ளுமாறு திணைக்களம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாடசாலைகளுக்கு அருகேயுள்ள

# இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்

## வடக்கு ஆளுநரிடம் ஆசிரியர் சங்கம் மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

**வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள இரா ணுவ முகாம்கள் அகற்றப்பட்டு மாணவர்களின் இயல்பான கல்விக்கு வித்திட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. மேலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற பாடசாலை மாணவர்கள் மீதான கொலைகள், கற்பழிப்புக்கள் மற்றும் பாடசாலைகளில் , கல்வித் திணைக்களங்களில் இடம்பெற்ற மோசடிகள், ஊழல்கள் தொடர்பிலும் விசாரணை உள்ளிட்ட 46 கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமை யிலான வடக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களின் மேற்படி ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வட க்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் பளிகக்கா ராவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது 46 கோரிக்கைகளை முன்வைத்து மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளரினால் வடக்கு ஆளுநருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. சந்திப்புத் தொடர்பாக ஜோசப் ஸ்ராலின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

வடக்கு மாகாணத்தின் கல்வி நிலைமைகளும் அதில் ஏற்படுகின்ற தாக்கங்களும் குறிப்பாக ஆசிரியர் மாணவர்கள் எதிர் நோக்கி வருகின்ற பாதிப்புக்கள் என்பன தொடர்பிலும் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளோம். இதன் போது பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளோம்.

அதாவது போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு ஐந்து வருடங்கள் கடக்கின்ற நிலையிலும் 83 பாடசாலைகள் தற்போதும் மூடியுள்ளன. ஆனால் மூடியுள்ள இப்பாடசாலைகளை இயங்கச் செய்வதற்கு பதிலாக இல்லாத இடங்களில் புதிய புதிய பாடசாலைகளை உருவாக்குதற்கு முயல்கின்றனர்.

மேலும் பாடசாலைகளுக்குள்ளும் பாடசாலைக்கு அருகிலும் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படவேண்டும்.

இவ்வாறான முகாம்கள் அகற்றப்படுவதனூடாகவே மாணவர்கள் மத்தியில் அச்சமற்ற தன்மையை வெளிப்படுத்தி மாணவர்களை கல்வியில் வளர்த்தெடுக்க முடியும். யுத்தத்தினால் பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாயில் உள்ள பலாலி ஆசியர் கலாசாலை மீண்டும் தமது பழைய இடத்திற்கே செல்ல வேண்டும். பேருந்து சேவையல்லாத கிராமங்களுக்கு இலவச பாடசாலை போக்கு வரத்துச் சேவை, உதவி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும், பாடசாலை அனுமதிகளிற்கான கட்டண அறவீடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் இல்லாத இடத்தில் புதிய பாடசாலைகளை உருவாக்க வேண்டும். இடமாற்றம் கிடைக்கப் பெறாத ஆசிரியர்களுக்கு நியாயமான முறையில் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். மேலும் சரியான இடமாற்றம் வழங்குவதற்குரிய நியாயமான முறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும், நெடுந்தீவில் பாடசாலைச் சிறுமி ஒருவரின் கொலை, வவுனியாவில் ஆசிரியர் நீருபன் கடத்தல், காரைநகரில் கடற்படையினரால் சிறுமி யொருவர் வன்புணர்வுக்குட்படுத்திய சம்பவங்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலைகளில் இடம்பெறும் ஊழல் மோசடிகளுக்கு பக்கச் சார்பின்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கில் மத்திய அரசால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் தமிழில் வெளியிட வேண்டும், குறிப்பாக கடந்த போரில் உயிரிழந்த மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் சரியான தொகையினை வெளியிட வேண்டும் உள்ளிட்ட 46 கோரிக்கைகளை புதிய ஆளுநரிடம் முன்வைத்து இவற்றை செய்ய வேண்டுமென்றும் வேண்டு கோள் விடுத்துள்ளோம் என ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

இத்தகைய கோரிக்கைகளுக்கமைய இடமாற்றம் மார்ச் மாதம் முதலாம் திகதி அமுல்படுத்தப்படும் எனவும் இராணுவம் சம்பந்தப்பட்ட விடயங்களை பாதுகாப்பு அமைச்சுடன் பேசித்தீர்ப்பதாகவும் மத்திய அரசிற்குட்பட்ட விடயங்களை மத்திய அரசோடு பேசி தீர்வை ஏற்படுத்துவதாகவும் ஆளுநர் பளிகக்காரா ஆசியர் சங்கத்திடம் தெரிவித்துள்ளதாக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-4)

## இரவில் சந்தையில் ஆள்நடமாட்டம்

(கரணவாய்)

நெல்லியடிச் சந்தையின் உட்பகுதிகளில் இரவு நேரங்களில் ஆள்நடமாட்டம் இருப்பது குறித்து கரவெட்டி பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

சந்தைப் பகுதியில் இரவு நேரங்களில் ஆள் நடமாட்டம் இருப்பது பல்வேறு துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு இடம் தந்துள்ளதாக சபையின் கவனத்திற்கு இதன்போது கொண்டு வந்தார்.

அதனை ஏற்றுக் கொண்ட சபை அடுத்து வரும் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (இ-3-60)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 4<br>தகைமை/தொழில்: A/L இத்தாலி PR<br>தொ.இ: B/4130 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23 சூரீசெவ் 10இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4144 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 35<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>தொ.இ: B/4131 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 70 செவ் 8இல்<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/4146 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 31 1/4 செவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: BBA/ அரச தொழில்<br>தொ.இ: B/4132 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 28 செவ் 2இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: A/L/<br>ஆசிரியர்எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4150 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 21 1/2 செவ் 7இல்<br>உயரம்: 172cm<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/4133 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 62 செவ் 12இல்<br>தகைமை/தொழில்: MA/ அரச தொழில்<br>தொ.இ: G/4153 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.








எழுவைதீவு முருகவேல் வித்தியாலய மாணவர்களின் பயன்பாட்டிற்காக நல்லூர் ரோட்டறி கழகத்தினால் கணனி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவை அதிபர் மற்றும் மாணவர்களிடம் கையளிக்கப்படுவதை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடவுளின் வலசை!

....பழங்களைப் பறித்துக் கொண்டு குகைக்குத் திரும்ப மாலை ஆகிவிட்டது.

வழக்கமாக அம்மா வரத் தாமதமானால், வாசலிலேயே குட்டி காத்திருக்கும்.

இப்போது, காணவில்லை.

முயல் தம்பியும் அப்புவும் தான் அதன் ஃப்ரெண்ட்ஸ்.

அம்மா கரடி, அவர்கள் வீட் டுக்குச் சென்று கேட்டது.

அவ அப்பவே போயிட் டாளே? என்றன.

அம்மா கரடியை கலக்கம் பற்றிக்கொண்டது.

அங்கும் இங்கும் தேடி அலைந்ததில் இருட்டிவிட்டது.

சற்றுத் தூரத்தில் நெருப்பு வெளிச்சம் தென்பட்டது.

அங்கே மனிதர்கள் இருக்கி றார்கள் என்று அர்த்தம்.

மனிதர்கள் காட்டுக்குள் வந் தால், பிரச்னைதான்.

அம்மா கரடி வெளிச்சம் வந்த திசைக்குச் சென்றது.

அங்கே கண்ட காட்சி...

முகாமில், தீ வளையத்தைச் சுற்றி மூன்று மனிதர்கள் அமர் ந்திருந்தார்கள்.

சற்று தள்ளி, இருட்டான இடத்தில் ஒரு கூண்டு.

அந்தக் கூண் டில் குட்டிக் கரடி. அதன் அருகில் பெரிய பலா ப்பழம்.





ஐயோ கண்ணே! பலாப்பழத் தைக் காட்டி உன்னைப் பிடித்து விட் டார்களா? என்று அழுதது.

மனிதர்கள் தூங்கிய பிறகு, கூண்டை நெருங்கியது.

அம்மாவைக் கண்டதும் குட்டி பரபரத்தது.

அம்மா எப்படியும் தன்னை விடுவித்துவிடுவாள் என்று நம் பியது.

ஆனால், அந்தக் கனமான இரும்புக் கூண்டிலிருந்து குட் டியை விடுவிக்க அம்மாவால் முடியவில்லை.

அம்மா, நான் என்ன தப்பு பண்ணினேன். எனக்கு ஏன் இப்படி நடந்தது? என்று அழுதது குட்டி.

. உன் மேல தப்பி ல்லை...

பிற உயிரினங்க ளைப் பாடாய்ப்படுத் தும் மனுஷங்க தப்பு என்றது அம்மா.

விடியும் நேரம் ட்ரக் ஒன்று வந்தது.

அந்த மனிதர்கள், கூண்டை அதில் ஏற் றினார்கள்.

அம்மா கரடி ஆர்ப் பாட்டம் செய்தது.

தீப்பந்தங்களைக் காட்டி அதை விரட்டி னார்கள்.

அவர்கள் கையில் துப்பாக்கியும் இருந் தது.

அம்மா, உன்னை சுட்டுருவாங்க. போயிரு என்றது குட்டி.

ட்ரக் நகரத் தொடங் கியது. அப்போது, டிரைவருக்கு வலப்பு றம் வானில் புழுதிப் படலம் போல தென்பட் டது. அது நெருங்கிய போதுதான் தெரிந்தது.

ஆயிரம் ஆயிரம் பட்டாம பூச்சிகள், தூசிப்படலம் போன்று தாழ்வாகப் பறந்து வர, வண் டியை இடதுபுறம் ஒடித்தான் டிரைவர்.

அதனால், தடுமாறி, அரு கில் இருந்த பள்ளத்தில் ட்ரக் கவிழ்ந்தது. கூண்டு வெளியே வந்துவிழ, அதன் பூட்டு, பாறை யில் மோதித் திறந்து கொண் டது.

வெளியே உருண்ட குட் டியை, அம்மா வாரி அணைத் துக் கொண்டது. இரண்டும் ஓட்டமாக ஓடி, எட்டாத தூரத் துக்கு வந்துவிட்டார்கள்.

உனக்கு அடி ஏதும் பட லியே? கண்ணீர் மல்க கேட்டது அம்மா கரடி.

எனக்கு ஒண்ணும் இல் லைம்மா" என்று மூச்சிரைக் கச் சொன்ன குட்டிக் கரடி, தலையை உயர்த்திப் பார்த் தது. தொலைவு வானில் பறந்து சென்றுகொண்டிருந்தன பட் டாம்பூச்சிகள்.

அம்மாவும் நிமிர்ந்து பார்த் தது. குட்டியை ஒரு கையால் அணைத்தவாறு, இதை வலசை போறதுனு சொல்வாங்க. பற வைகள், வெட்டுக்கிளிகள் போன்றவை வலசைபோவது அடிக்கடி நடக்கும்.

பட்டாம்பூச்சிகள் வலசை போவது மிக அபூர்வமான காட்சி. இது, நமக்காக கடவுளே வலசைபோகிற மாதிரி தோணுது என்றது.

உண்மைதான் என்ற குட்டி, வானை நோக்கி கை அசைத்தது. *(முற்றும்)*




- 1547 - ஆறாம் எட்வேர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1627 - யா ழ்ப்பாணத்தைத் தாக்கிய சூறாவளியில் சிக்கி பலர் இறந்தனர்.
- 1798 - பாப்பரசர் ஆறாம் பயஸ் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1835 - சிலியின் கொன்செப்சியோன் நகரம் நிலநடுக்கத்தில் அழிந்தது.
- 1910 - எகிப்தியப் பிரதமர் பூட்ரோஸ் காலி (Boutros Ghali) கொல்லப்பட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா எனிவெட்டாக் தீவைக் கைப்பற்றியது.
- 1962 - மேர்க்குரி திட்டம்: ஜோன் கிளென் பூமியை மூன்று முறை சுற்றி பூமியைச் சுற்றிய முதலாவது அமெரிக்கர் என்ற புகழைப் பெற்றார்.
- 1965 - அப்பலோ விண்கலங்கள் சந்திரனில் இறங்குவதற்கான இடங்களை வெற்றிகரமாகப் படங்கள் எடுத்த ரேஞ்சர் 8 விண்கலம் சந்திரனுடன் மோதியது.
- 1987 - அருணாசலப் பிரதேசம் அசாமிலிருந்து பிரிந்து தனி மாநிலமாகியது.

பிறப்புகள்

- 1876 - கா. நமச்சிவாயம், தமிழறிஞர் (இ. 1936)
- 1937 - ரொபேர்ட் ஹியூபர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய வேதியியலாளர்
- 1945 - ஜியார்ஜ் ஸ்மூட், அமெரிக்க விண்ணியல் அறிஞர
- 1963 - சார்ல்ஸ் பார்க்லி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்
- 1977 - ஸ்டெஃபான் மார்பெரி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

இறப்புகள்

- 1896 - ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், புலவர் (பி. 1820)
- 1907 - ஹென்றி முவாசான், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு வேதியியலாளர், (பி. 1852)
- 1916 - கிளாஸ் ஆர்னல்ட்சன், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி. 1844)
- 1972 - மரீயா கோப்பர்ட்-மேயெர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர், (பி. 1906)
- 1976 - ரெனே காசின், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1887)
- 2008 - டி. ஜி. எஸ். தினகரன், கிறித்துவ மறைபரப்புனர் (பி. 1935)
- 2011 - [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

....திரைக்கதை - வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுத, எஸ்.பி. முத்துராமன் இயக்கினார். இப் படத்தில் ரஜினிக்கு ஜோடி ஸ்ரீதேவி. மற்றும் சில்க் சுமிதா, மனோரமா, எஸ்.வரலட்சுமி, ரவீந்தர், ஜெய்சங்கர, வி.கே.ராமசாமி, சோ, செந்தாமரை, வி.கோபால கிருஷ்ணன், சி.எல். ஆனந்தன், எஸ்.எஸ்.சந்திரன் ஆகியோரும் நடித்தனர். படத்தின் பெரும்பாலான காட்சிகள் உதய பூரில் படமாக்கப்பட்டன. இதில் ஆனந்தனுடன் ரஜினி போட்ட கத்திச்சண்டை புதுமையாகவும், விறுவிறுப்பாகவும் இருந்தது. வாள் வீச்சிலும் புது ஸ்டைலை கையாண்டு வெற்றி பெற்றார், ரஜினி. 7-7-1983இல் வெளிவந்த இந்தப்படம் வெற்றி பெற்று, **"தங்கரி தொங்கா"** என்ற பெயரில தெலுங்கிலும் "டப்" செய்யப்பட்டது.

### 247 நாள் ஓடிய தங்கமகன்

ரஜினிகாந்த் நடித்த சத்யா மூவிஸ் **"தங்க மகன்"** படம், பெரிய வெற்றி பெற்றது. எஸ்.ஜெகதீசன் எழுதிய கதைக்கு, ஆர்.எம்.வீரப்பன் திரைக்கதை எழுதினார். வாலி, வைரமுத்து, முத்துலிங்கம், புலமைப்பித்தன், நா.காமராசன் ஆகியோர் எழுதிய பாடல்களுக்கு இளையராஜா இசை அமைத்தார். ஏ.ஜெகந்நாதன் டைரக்ட் செய்தார்.

ரஜினிக்கு ஜோடியாக பூர்ணிமா ஜெயராம் நடித்தார். மற்றும் விஜய குமாரி, சில்க் சுமிதா, அனுராதா, மனோரமா, ஜெய்சங்கர், தேங் காய் சீனிவாசன், ரவீந்தர், வி.கே. ராமசாமி, மனோகர், வி.கோபால க்கிருஷ்ணன் ஆகியோர் நடித்தனர். ரஜினியின் நடிப்பும், படப்பிடிப்பும், பாடல் காட்சிகளும் சிறப்பாக இருந் தன. வில்லன்களிடமிருந்து பூர்ணி மாவை காப்பாற்ற, ஜீப்பை சுற்றிச் சுற்றி ஓட்டியபடி ரஜினிபோட்டச்ண்டை விறு விறு ப்பாக இருந்தது.

படத்தின் பிற் பகுதியில் ரெட் டியார் வேடத்தில் ரஜினி தோன்றி, தெலுங்கு பேசி அசத்துவார். ரசி கர்களை விழுந்து விழுந்து சிரி க்க


61

ரஜினி- ஸ்ரீதேவி படம் -அடுத்த வாரிசு

வைத்த காட்சி இது. சென்னையில் நூறு நாட்களைத் தாண்டி ஓடிய இப்படம், மதுரையில்247 நாட்கள்ஓடி சாதனை படைத்தது.

### தம்பிக்கு எந்த ஊரு?

பஞ்சு அருணாசலத்தின் பி.ஏ. ஆர்ட் புரொடக்ஷன்ஸ் தயாரித்த படம் **"தம்பிக்கு எந்த ஊரு."** இதில் ரஜினிக்கு ஜோடி மாதவி. மற்றும் சுலக்ஷனா, வாணி, கோவை சரளா, செந்தாமரை, வி.எஸ்.ராகவன், வினுசக்ரவர்த்தி, ஸ்ரீகாந்த், ஜனக ராஜ் நடித்தனர். பஞ்சு அருணா சலம் எழுதிய பாடல்களுக்கு, இளை யராஜா இசை அமைத்தார். ராஜ சேகர் டைரக்ட் செய்தார். இந்தப் படத்தில் வில்லனாக சத்யராஜ் நடித் தார். படப்பிடிப்பின் போது சத்யரா ஜின் நடிப்பை ரஜினி பாராட்டிய துடன், எதிர்காலத்தில் கதாநாயக னாக வெற்றி பெறுவீர்கள் என்று வாழ்த்தினார். சத்யராஜின் இன் றைய வெற்றியை அன்றே கணித் தவர் ரஜினி. இந்தப் படத்துக்கு, ஆரம்பத்தில் **"நானே ராஜா, நீயே ராணி"** என்று பெயர் வைத்திருந் தனர். பிறகு பெயர் மாற்றப்பட்டது.

**"தம்பிக்கு எந்த ஊரு"**, நூறு நாட்கள் ஓடிய வெற்றிப்படம். கன்ன டத்தில் வெளிவந்த **"கதா சங்கமா"** என்ற படம், தமிழில் **"கை கொடுக் கும் கை"** என்ற பெயரில் தயாரா கியது. கன்னடத்தில் வில்லனாக நடித்த ரஜினிகாந்த், தமிழில் கதா நாயகனாக நடித்தார். நடிகர் விஜய குமார், ரஜினியை வைத்து சொந்த மாகப் படம் தயாரிக்க விரும்பி னார். அதை ஏற்றுக் கொண்ட ரஜினி, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறு ப்புகளை மகேந்திரனிடம் ஒப்ப டைக்குமாறு கூறினார்.

### ஒரே படத்தில் 3 கதைகள்

கன்னடத்தில் பிரபல டைரக் டராக விளங்கியவர் புட்டண்ணா. அவர் 1976இல் **"கதா சங்கமா"** என்ற படத்தை எடுத்தார். அந்தப் படத்தில், 3 எழுத்தாளர்களின் மூன்று கதைகள் இடம் பெற்று இருந்தன. மூன்று கதைகளிலும் வெவ்வேறு நடிகர் - நடிகைகள் நடித்திருந்தனர். மூன்றாவது கதை யின் பெயர் **"முனிதாயி."** அதை விரிவுபடுத்தி, **"கை கொடுக்கும் கை"** என்ற பெயரில் படமாக்க மகேந திரன் முடிவு செய்தார். "முனிதாயி" கதை புரட்சிகரமானது. கதாநாயகி யான முனிதாயி, பார்வையற்ற பெண். முற்போக்கான இளை ஞன் ஒருவன் அவளைத்திருமணம் செய்து கொள்கிறான். அந்த வீட்டில் வேலை செய்யும் சிறுவன் - முனிதா யியை "அக்கா" என்று அழைப்பவன் - ஒரு நாள் அவள் குளிப்பதை பார்த்து விடு கிறான். அந்த ஊரில், குடித்து விட்டு சீட்டாடி பொழுதைப் போக்கும் போக்கிரிக் கூட்டம் ஒன்று உண்டு. அந்தக் கூட்டத்திற்கு தலை வர் ரஜினிகாந்த்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்



**வைரமுத்து- 83**

....தொப்பூழ்க்கொடியோட மொழுக்ன்னு தரைபாத்து வெளிய வந்து விழுந்த பிள்ள அட்டஞ்சாச்சுப் பெரண்டு மல்லாக்க விழுந்திருச்சு சாம வைக்கோல் மேல.

யாத்தேன்னு விட்ட பெருமூச்சில வலிய வெளிய அனுப்புனவ, ஒரு எக்கு எக்கி எட்டிப்பாத்தா

ஏம் பிள்ள உசுரோட இருக்கா? இருக்கு கைகால் அசையுது.

ஆணா பெண்ணா? ஆம்பிளைப் பிள்ளதான்! கன்னங் கரேல்ன்னு குரவைமீன் மாதிரி அடையாளமிரு க்கு. அதத் தொட்டும் பாத்து மருந்து மலந்து குளுந்து போனா குளுந்து.

சாவோட தலமாடு வரைக்கும் கூட்டிட்டுப் போயி வகுத்துல இருந்த பிள்ளையக் கையில குடுத்திட்டுப் போயிட்டியே காளியாத்தா! ஒனக்குக் கெடா வெட்டுறேன்.

பிள்ள தரையில கெடந்தாலும் தொப்பூழ்க் கொடிக்கும் தாய்க்கும் தொடுப்பு அறுபடல; ஆனா உள்ள இருக்க நஞ்சுப்பை மட்டும் வெளிய வந்து விழுகல.

வாந்தியெடுக்கிறவ மாதிரி ஒரு செருமிச் செருமி அடி வகுத்துல அழு த்தம் குடுத்து ஓங்கி ஒரு இருமு இரு மினா. பொசுக்குன்னு வெளிய வந்தோடி விழுந்து பாச்சு நொரை நொரையா நஞ்சுப் பையி.

மகனே கருணக் கெழங்கு மாதிரி கரு கருன்னு தரையில கெடக்குற என் மகனே! ஒனக்கு ஒரே தாய் தாண்டா; அது ஒலக த்துல உண்டானது. எனக்கு நீ ஒரே மகன் தான்டா; இது நான் உண்டாக்கிக்கிட்டது.

வலியில தெரியல இப்பத் தெரியுது. இடுப்புலயே சொருகி வச்சிருந்த பண்ண ருவா எடுத்தா தொப் பூழ்க் கொடிய அறு த்தா. ஒழுகிச்சு ரத்தம் முடிபோட்டா. சாம வைக்கோல வெலக் குனா; பண்ணருவா மூக்குலயே பள்ளந் தோண்டுனா. மாசு மருவை யெல்லாம் அதுலயே போட்டுப் பொதைச்சா. கசகசங்கிற ஒடம் போட பிசு பிசுங்கற சீலையோட எந்திரிச்சா.



தூக்குனா பிள்ளய. முந்தானையில தொட்டில் கட்டி முடிஞ்சுக் கிட்டா கழுத்துல. செதறிக் கிடந்த சொரக் குடுக்க பூசனிக்காயை யெல்லாம் ஒரு கால்லயே தள்ளி ஒதுங்க வச்சா. வெளிய வந்தா.

நனைஞ்கெடந்த வெறகுக்கட்ட நிமித்தித் தலையை முட்டுக் குடுத்துத் தாங்கி சுமாந்தா.

கருவேலங்காட்டு ஒத்தையடிப் பாதையில நடையில கூடிட்டா. இந்தா போறா பாரு இவதாண்டா பொம்பள ன்னு கடபுட கடபுடன்னு கைதட்டுது ஆகாயம்.

வாடா ராசா வாடான்னு புதுப் பயலுக்கு ஒரு சரவெளக்க ஏத்தி எறியுது மேகம்.

ஏலே! கடைசியில செயிச்சது யாரு? கருவாச்சிதான? அத்துவிட் டாக; அழிச்சாட்டியம் பண்ணியும் பாத்தாக. நேத்து காட்ல பொதைய லெடுத்த மாதிரி கையில பிள்ளை யோட வந்துட்டாளா இல்லையா? ஆதியிலேயே அப்பன் இல்ல. இப்ப ஆத்தாளுமில்ல. உள்ளங்கையில அடு ப்புக்கூட்டி ஒருத்தியாக் கஞ்சி காச்சிற மாதிரி ஒத்தையில பிள்ளபெத்து ஒண்ணும் நடக்காத மாதிரி நடந்து வந்துட்டளாப்பா. கட்டையன் கட் டின தாலி கழுத்துல. கட்டையன் குடுத்த பிள்ள இடுப்புல.

இன்னைக்கிச் சொல்றேன் எழு திக்க என்னைக்கிருந்தாலும் சடையத் தேவன் தேடிவச்ச சொத்தக்கட்டி யாளப் போறது யாரு? கருவாச்சி மகன்தானப்பா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்கு உதவுங்கள்

## 433 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் கோரிக்கை

(முல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவின் 15 கிராமசேவகர் பிரிவுகளில் யுத்தம் காரணமாகவும் மற்றும் ஏனைய வழிகளிலும் குடும்பத் தலைவர்களை இழந்தும் மற்றும் குடும்பத் தலைவர்களைப் பிரிந்தும் 433 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ்வதாகவும் இவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் பலருக்கு கிடைக்கவில்லையென்றும் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.**

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குடும்பத்தலைவரை இழந்த நிலையில் 352 பேரும் மற்றும் வன்னி யுத்தத்தின் போது பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்டு குடும்ப பிணக்குகள் காரணமாக கணவனை பிரிந்த நிலையில் 81 பெண்களுமாக மொத்தம் 433பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 20 தொடக்கம் 40 வயதுக் கிடைப்பட்ட 42 பெண்களும் 41 தொடக்கம் 60 வயதிற்கிடைப்பட்ட 133 பெண்களும் 60 வயதிற்கு மேற்பட்ட 177 பெண்களுமாக மொத்தம் 352 பெண்கள் குடும்பத் தலைவனை இழந்து வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை குடும்பப் பிரச்சினைகள் காரணமாக 81 பெண்கள் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலக புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி குடும்பத்தலைவர்களை இழந்தும் மற்றும பிரிந்தும் வாழ்பவர்களில் மாற்றுத்திறனாளிகளும் உள்ளனர்.

எனவே புலம்பெயர் தமிழ் உறவுகள் மற்றும் அரச அரசசார்பற்ற அமைப்புக்கள் இவ்விடயத்தை கவனத்தில் எடுத்து தமக்கான வாழ்வாதார உதவிகளை ஏற்படுத்தி தர வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் மேற்படி கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-15)

## மரத்துடன் மோதி வாகனம் விபத்து

### ஒருவர் படுகாயம்

(கனகபுரம்)

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கன்டர் வாகனம் வீதியோரமாக நின்ற மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் வாகன உதவியாளர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வாகனம் பலத்த சேதத்திற்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியவில் மன்னார் வெள்ளாங்குளம் வீதியில் நடைபெற்றுள்ளது. இதில் மன்னாரைச் சேர்ந்த அன்ரனி பிஹறாடோ (வயது-28) என்பவரே படுகாயம் அடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, மன்னார் பள்ளிமுனையிலிருந்து மீன்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கன்டர் வாகனம் மரத்துடன் மோதுண்டு விபத்திற்குள்ளானது. இதன்போது சாரதிக்கு உதவியாகப் பயணித்தவர் படுகாயம் அடைந்தார். அத்துடன் வாகனமும் பலத்த சேதத்திற்குள்ளானது. படுகாயம் அடைந்த பிரஸ்தாபநபர் முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அன்றையதினமே கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ்விபத்தின்போது வாகன சாரதி எதுவித காயமுமின்றி மயிரிழையில் உயிர் தப்பினார். (அ-2-259)

## நட்டஈடு கிடைக்காவிட்டால் கண்டன ஆர்ப்பாட்டம் நடக்கும்

### பாதிக்கப்பட்ட விவசாயிகள் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2014-2015 ஆம் ஆண்டில் காலபோக விதைப்பில் ஈடுபட்டு பயிரழிவு ஏற்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் நட்டஈட்டுக் கொடுப்பனவு கிடைக்காத கமநலசேவை நிலையங்கள் ஒன்றிணைந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழ் இயங்கும் கமக்கார அமைப்புக்களின் பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் உருத்திரபுரம் கமநலசேவை நிலையத்தில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போதே மேற்படி நட்டஈடு கிடைக்கப்பெறாமைக்கு கண்டனம் தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த பயிரழிவு நட்ட ஈட்டுக் கொடுப்பனவு சில கமநல சேவை நிலையங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டது.

இந்நிலையில் உருத்திரபுரம், கிளிநொச்சி, புளியம்பொக்கணை ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு நட்ட ஈட்டுத்தொகை இதுவரை கிடைக்கப் பெறவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட ஒரு சில கிராமங்களுக்கு மட்டும் இந்நட்ட ஈட்டுத்தொகை வழங்கப்பட்டதுடன் ஏனையோருக்கு வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உரிய அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இருந்த போதிலும் இக்கொடுப்பனவு கிடைக்கப் பெறாதவர்களுக்கு வழங்கப்படுவது இல்லாது போகும் நிலைமையே ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது என விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது. (அ-2-254)




## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளி/ முருகானந்தா கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளன. எனவே சகல பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (அ-2)

◆◆◆◆◆◆◆◆

## பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளி/ முருகானந்தா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் புதிய நிர்வாக தெரிவும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளன. எனவே சகல பெற்றோர்களையும் கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (அ-2)

# தமிழர்களின் நிலங்களை விடுவிப்பதற்கு அரசிடம் நீதியான அணுகுமுறையில்லை

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன்

(குருமன்காடு)

இலங்கைக்கு வழங்கப்படும் கால அவகாசம் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பை ஊக்குவிக்கவே பயன்படும். மேலும் தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட வட மாகாணசபையில், "இன அழிப்பு" தீர்மானம் முழு ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற நிலையில், இங்கு நடந்தது வெறுமனே, மனித உரிமை மீறல் என்றோ போர்க்குற்றம் என்றோ மட்டுப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப்படுவது தவிர்க்கப்படவேண்டும் என வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் அமெரிக்க பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் அவரது இல்லத்தில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமெரிக்க தூதரக அரசியல் அதிகாரி ஜோசப் ஸ்காலர் மற்றும் யு.எஸ்.எயிட் அதிகாரி ஜேசன் அப்லான் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.



ஒன்றரை மணித்தியாலங்களாக இடம்பெற்ற இச் சந்திப்பில் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. இதன்போது து.ரவிகரன் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட வடமாகாணசபை, 60 ஆண்டுகளாக இங்கே தமிழர்களுக்கு எதிராக இன அழிப்பு நடைபெற்று வருகிறது என்பதை ஆதாரங்களுடன் தீர்மானமாக வெளியிட்டிருக்கிறது. இதை தமிழர்களின் ஒருமித்த அதிகாரபூர்வமான குரலாக அங்கீகரித்து, இங்கு நடந்ததை வெறுமனே மனித உரிமை மீறல் என்றோ போர்க்குற்றம் என்றோ மட்டுப்படுத்தி அடையாளப்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

இராணுவத்தினர் அகற்றப்படவில்லை. மாறாக எனது இல்லத்தில் கடற்படைச் [illegible] இராணுவத் தளபாடம் இருக்கிறதா என சோதனை செய்ய வருமளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது. அபகரிக்கப்பட்ட தமிழர் நிலங்களை விடுவிப்பதற்கு தற்போதைய அரசிடம் நீதியான அணுகுமுறை இல்லை. மத அடையாளங்கள் திணிப்பு தொடர்பில் எந்த மாற்றமும் இல்லை. ஆக, கடந்த தேர்தலில் நடந்தது ஆள் மாற்றம் மட்டுமே எனது தெளிவாகியுள்ளது. இந் நிலையில் சர்வதேச விசாரணை அறிக்கையை வெளியிடாமல் இலங்கைக்கு கொடுக்கும் கால அவகாசமானது தமிழர்களுக்கெதிரான இன அழிப்பை ஊக்குவிக்கவே பயன்படப் போகிறது.

மேலும் வேலைவாய்ப்பின்மை, உள் வீதிகள் செப்பனிடப்படாமை உள்ளிட்ட பூர்த்தி செய்யப்படாத அபிவிருத்தி விடயங்கள், தாயகத்தில் மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள், உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தியாக்கப்படாத பாடசாலைகள் பலவற்றின் நிலை உள்ளடங்கலாக பல விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



# அரச அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுங்கள்

## டில்லி முதல்வர் கெஜ்ரிவால் அதிரடி

(புதுடில்லி)

**டில்லி முதல்வராக இரண்டாவது முறையாக பொறுப்பேற்றுள்ள ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் அரசு அதிகாரிகளுக்கு பொதுமக்கள் இலஞ்சம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.**



ஊழலுக்கு எதிராக போராட்டத்தல் துவங்கி தற்போது முதல்வராகியுள்ள கெஜ்ரிவால் இவ்வாறு கூறியிருப்பது அனைவருக்கும் அதிர்ச்சியை அளிக்கலாம். ஆனால், அவர்கள் கூறியிருப்பதை முழுமையாக தெரிந்து கொண்டால் உண்மை புரியும்.

அதாவது, அரசு அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுங்கள். ஆனால், அதற்கு முன்பு இலஞ்சம் கொடுப்பதை இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகளிடம் சொல்லிவிடுங்கள். அப்போது தான் அவர்கள் இலஞ்சம் வாங்குபவர்களை கைது செய்து 7 ஆண்டுகள் வரை சிறையில் அடைக்க முடியும்.

இலஞ்சம் கொடுப்பதை இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகளுக்கு சொல்லாமல் இலஞ்சம் கொடுத்தால், இலஞ்சம் கொடுப்பவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிருத்வி 2 ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

(சென்னை)

அணுஆயுதம் தாங்கிச் செல்லும் பிருத்வி-2 ரக ஏவுகணை, இந்தியாவின் ஒடிசா மாநிலம் சந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து நேற்று (வியாழக்கிழமை) காலை 9.15 மணியளவில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பிருத்வி -2 ஏவுகணை, 500 -1000 கிலோ எடையுள்ள அணுஆயுதங்கள், வெடிபொருட்களைச் சுமந்து, 350 கிலோ மீற்றர் தொலைவு வரை உள்ள தரை இலக்குகளை தாக்கும் திறன் படைத்தது.

கடந்த 2003-ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்ட இந்த ஏவுகணையை பயிற்சிக்காக அவ்வப் போது சோதனை செய்வது வழக்கம். அதன் ஒருபகுதியாக, நேற்று வியாழக்கிழமை சோதனை செய்யப்பட்டது.

இது குறித்து, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் ஒருங்கிணைந்த ஆய்வு மைய இயக்குநர் கூறும்போது, காலை 9.15 மணிக்கு ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது. 500 கிலோ எடையுள்ள போலி ஆயுதங்களை ஏந்தியபடி ஏவுகணை திட்டமிட்ட இலக்கை துல்லியமாக தாக்கியது என்றார்.

கடைசியாக பிருத்வி-2 ரக ஏவுகணை, கடந்த ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி சோதனை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

பாரதச் செய்தி

# ராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழரின் நிலங்கள் ஐ.நா. கூட்டத்திற்கு முன்பு விடுவிக்க வேண்டும்

## தொல்.திருமாவளவன் வலியுறுத்து

ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்திற்கு முன்னர் தமிழர்களின் நிலங்களை திரும்ப ஒப்படைக்க இந்தியா வலியுறுத்த வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் புதிய ஜனாதிபதி பொறுப்பேற்று பல வாரங்கள் கடந்த பின்னரும்கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் திரும்பப் பெறப்படவில்லை. இராணுவத்தை உடனடியாக திரும்பப் பெறுவோம் என வாக்குறுதி அளித்துத்தான் தமிழர்களின் வாக்குகளை மைத்திரிபால சிறிசேன பெற்றார். ஆனால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குப்பதிலாக இனப்படுகொலைக் குற்றவாளிகளைக் காப்பாற்றும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கிறார்.

மார்ச் மாதம் 2ஆம் திகதி தொடங்கவுள்ள ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த இலங்கை போர்க்குற்றம் தொடர்பான அறிக்கையை அடுத்த கூட்டத்துக்குத் தள்ளிப்போட இலங்கை செய்த முயற்சி வெற்றி பெற்றுவிட்டது. செப்டெம்பர் கூட்டத்தில் அது சமர்ப்பிக்கப்படும் என ஐ.நா. மனித உரிமை ஆணையர் கூறியிருக்கிறார். இலங்கைப் பிரச்சினையில் முன்னாள் ஆணையர் நவநீதம்பிள்ளையைப் போல தற்போதிருக்கும் ஆணையர் செயற்படுவாரா? என்ற நியாயமான சந்தேகம் நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபாலவைத் தமது பிடிக்குள் வைத்துக்கொள்வதன் மூலம் இந்து மாக் கடல் பகுதியில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தத் திட்டமிடுகின்றன. எனவே பாராளுமன்றத் தேர்தலில் மைத்திரிபாலவின் தரப்பு வெற்றிபெற வேண்டும் என விரும்புகின்றன.

ஆனால் தமிழ் மக்களின் நலனைப் புறக்கணித்து மைத்திரிபாலவை இந்தியா ஆதரிப்பது புதிராக இருக்கிறது. அப்படிச் செய்வது இந்துமாக்கடல் பகுதியில் அமெரிக்க ஆதிக்கம் பெருகவே வழிவகுக்கும். அது வாணலிக்குப் பயந்து அடுப்புக்குள் குதித்த கதையாகவே இருக்கும்.



ஐ.நா. மனித உரிமைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் தமிழர் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டிருக்கும் இராணுவம் திரும்பப் பெறப்பட வேண்டும், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் உடனடியாக தமிழ் மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என இலங்கையை இந்தியா வலியுறுத்தவேண்டும்.

மைததிரிபாலவுடன் போடப்படிருக்கும் வர்த்தக ஒப்பந்தக்களுக்காக தமிழர் உரிமைகளைப் பலியிட்டுவிடக் கூடாது என இந்திய அரசை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது என மேலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஜெயா பற்றி பேசியதால் சட்டப்பேரவையில் அமளி

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீதான விமர்சனத்தைத் தொடர்ந்து, தே.மு.தி.க. எம்.எல். ஏ.க்கள் சட்டப்பேரவையில் இருந்து கூண்டோடு வெளியேற்றப்பட்டதோடு, நடப்பு கூட்டத்தொடர் முழுவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சட்டப்பேரவையில் ஜனநாயகம் தோண்டி புதைக்கப்பட்டுவிட்டது என்றும், அவைத்தலைவர் சர்வாதிகாரி போல செயற்படுகிறார் என்றும் தே.மு.தி.க. சட்டப்பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மோகன்ராஜ் தெரிவித்தார்.

முன்னதாக, அவையில் நடைபெற்ற விவாதத்தின்போது, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா பற்றி பேசிய தே.மு.தி.க. எம்.எல்.ஏ., ஒரு வார்த்தையைக் கூறினார்.

அதற்கு அ.தி.மு.கவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அந்த வார்த்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, கடும் அமளியும் கூச்சலும் குழப்பமும் நிலவியது. தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர். அவையில் இருந்து "சபாநாயகர் ஒழிக" என கோஷமிட்டபடி தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க்கள் வெளியில் வந்தனர்.

பின்னர் நிருபர்களுக்குப் பேட்டியளித்த தே.மு.தி.க. எம்.எல்.ஏ. மோகன்ராஜ் கூறும்போது, "சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீது நன்றி தெரிவிக்கும் விவாதம் நடைபெற்றது.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையில் நான் எழுந்து பேசினேன். ஆளுநர் உரையில் மக்களுக்கான அறிவிப்புகள் இடம் பெற வேண்டும். அவ்வாறு இடம் பெறவில்லை. மாறாக ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற ஒருவரை புகழ்ந்து பேசுகிறாரே இது நியாயம் தானா? என்று வினவினேன். இதற்கு அவையில் இருந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அப்போது நான், ஸ்ரீரங்கம் சட்டப்பேரவைத் தொகுதி காலியாக இருப்பதாக பேரவைச் செயலாளர் ஜமாலுதீன்தான் அறிவித்தார். அவர் அந்த அறிவிப்பில் குறிப்பிட்டதைத்தான் நான் அவையில் தெரிவித்திருக்கிறேன். நான் புதிதாக ஒன்றும் கூறவில்லை என்றேன்.

நான் குறிப்பிட்ட "அந்த" வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என அ.தி.மு.க.வினர் கோஷமிட்டனர். சிலர் எங்களை அடிக்க முயன்றனர்.

அவைத்தலைவர் சர்வாதிகாரியைப் போல் அவைக்குறிப்பில் இருந்து அந்த வார்த்தையை நீக்கியதோடு, எங்களை கூண்டோடு வெளியேற்றுமாறும் உத்தரவிட்டார். சட்டப்பேரவை ஜெயலலிதாவின் புகழ் பாடும் மன்றமாகிவி[illegible] (இ-5)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மார்ச்சில் தாக்கல் செய்ய வேண்டும்

ஜெனீவாவில் மார்ச் மாதம் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மான த்தை தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் பண்ருட்டி தி.வேல முருகன் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், தமிழீழத் தாயகத்தில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை படுகொலை செய்த சிங்களப் பேரினவாத இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் தொடர்பான அறிக்கையை 6 மாத காலத்துக்கு ஒத்திவைக்க ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் விசாரணைக் குழு முடிவு செய்துள்ள உலகத் தமிழர்களை கடும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையக் [illegible] மார்ச் 25 ஆம் திகதியன்று இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட இருந்தது. இனப்படுகொலைக்கு உள்ளாகி இருக்கும் தமிழினத்துக்கு இந்த அறிக்கை ஒரு ஆறுதலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது இந்த அறிக்கை 6 மாத காலத்துக்கு ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிப்பு வெளியாகி இருப்பது துயரத்தைத் தருகிறது.

இலங்கையில் தமிழர்களின் வாக்குகளால் ஜனாதிபதியாக வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன, தாம் அதிகார நாற்காலியில் அமர்ந்தவுடன் வழக்கமான சிங்கள நரித்தனத்தை வெளிப்படுத்த தொடங்கினார். இதன் உச்சமாக போர்க் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் வகையில் உள்நாட்டிலேயே நாங்கள் விசாரணை நடத்தப் போகிறோம் என்று சர்வதேச நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் மங்களசமரவீர அனுப்பி வைத்தார் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றுமொரு ஆட்சி அல்ல புதிய நம்பிக்கை!

ஆம் ஆத்மி கட்சிக்குக் கிடைத்த வெற்றி டெல்லி மக்களுக்கு மட்டு மல்ல, நம்மில் பலருக்கும் மகிழ்ச்சியைத் தந்து முகங்களில் புன்னகையை வரவழைத்துள்ளது. நம்முடைய மகிழ்ச்சிகளுக்கெல்லாம் காரணங்கள் வெவ்வேறு இடதுசாரிகளும் சமத்துவ - சுதந்திரச் சிந்தனையாளர்களுக்கும் மகிழ்ச்சி ஏற்படக் காரணம், மதச்சார்பற்ற சக்திகளுக்குத் தேவைப்படும் ஆற்றலை இந்த வெற்றி அளித்திருக்கிறது. மத்திய வாத அரசியல் சார்புள்ளவர்களுக்கு, பிரதமர் வசிக்கும் சொந்த வீடான டெல்லியிலேயே பா.ஜ.க படு தோல்வி அடைந்திருக்கிறதே என்ற மகிழ்ச்சி.

பா.ஜ.கவிலேயே முக்கியத்துவம் இழந்த கட்சித் தலைவர்களும் இந்தத் தோல்வி இப்போதைய தலைவர்களின் கண்களைத் திறக்க உதவும் எச்சரிக்கை என்ற அளவில் நிம்மதி அடைந்திருக்கிறார்கள். எல்லாவற்றையும்விட ஆஆக வெற்றியின் முக்கியமான அம்சம் நாட்டு மக்களின் ஜனநாயக உணர்வுக்குப் புத்துயிர் ஊட்டி யிருக்கிறது. அரசியல் சாதனைக ளுக்காக அல்ல, இந்த ஒரு ஆக்க பூர்வமான அம்சத்துக்காகவே நானும் இதை வரவேற்கிறேன்.

**ஆ.ஆ.க ஆதரவாளன் அல்ல!**

முதலிலேயே ஒரு விஷயத்தைக் கூறிவிடுகிறேன். நான் அர்விந்த் கேஜ்ரிவாலின் ஆதரவாளன் அல்ல - அவருடைய ஆலோசகர்களில் சிலர் மதிக்கத் தக்கவர்கள் என்றாலும்கூட. அவருடைய எடுத்தேன் - கவிழ்த்தேன் போக்கு, வழக்கத்துக்கு மாறான அறிவிப்புகள், சமூகரீதியாக வலதுசாரிக் கொள்கைகளில் சார்பு, ஒரு தலைவராக சமூக - அரசியல் பார்வை இல்லாத குணம் போன்றவை எனக்குப் பிடிக்காது. ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார் என்பது மட்டுமே அவரிடம் உள்ள சாதகமான அம்சம்.

இவ்வளவு தயக்கங்கள் இருந்தபோதிலும் 2013இல் அவர் டெல்லியில் முதலமைச்சராகப் பதவியேற்றபோது மகிழ்ச்சி அடைந்தேன். நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு சாதனையை அவர் நிகழ்த்தியிருந்தார். ஒரு சாதாரண மனிதர், விசுவாசமான தொண்டர்களின் உதவியோடு முதலமைச்சர் பதவியில் போய் அமர்வது சாதாரணமாக நடக்கக்கூடிய செயலா? சமூகத்திலோ அரசியலிலோ எது நடந்தாலும் - நமக்கென்ன என்று - வேடிக்கை பார்க்கும் மத்திய தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், வெளிப்படையான, நேர்மையான அரசியலும் வலுவானதுதான் என்று நாட்டுக்கே நிரூபித்துக் காட்டினார். நாம் கண்டிக்கும் பதவி, பணம், அதிகாரம் அனைத்தும் கொண்ட ஒருவரை முதல்வர் பதவியிலிருந்தே தூக்கி எறிந்தார். அரசியல் தலைவர்களின் வாரிசுகள்தான் ஆட்சிக்கு வர முடியும் என்ற மாயையை உடைத்து, சாதாரண மக்களும் ஆட்சிக்கு வர முடியும் என்று புதிய மாற்று அரசியலை அடையாளம் காட்டினார்.

நம்முடைய மாநிலத்திலும் அரசியல் கலாச்சாரமும் காட்சிகளும் இனி மாறாதா என்று துணிச்சலுடன் நம்பத் தொடங்கினோம். அது ஒரு புது அனுபவத்தைத் தந்தது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, நடைபாதையில் வடை சுடும் நபரிலிருந்து நாட்டில் சமூக அந்தஸ்து பெற்ற தொழிலதிபர் வரை பலரும், நம் நாட்டில் மீண்டும் ஜனநாயகம் செயல்படத் தொடங்கிவிட்டது என்று உணர்ந்தார்கள். அதுவரை தேசிய அரசியலில் காங்கிரஸ், பாரதிய ஜனதா என்ற ஜாம்பவான்களுக்கும் மாநிலங்களில் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., தெலுங்கு தேசம், கட்சி போன்றவர்களுக்கும்தான் வாய்ப்பு என்று முடிவு கட்டியிருந்தோம்.



**சாதி, மத அடிப்படையில் அல்ல!**

கடைசியாக ஒரு தலைவரும் அவருடைய கட்சியும் நமக்குப் புதியதொரு மாற்று வாய்ப்பையும் வழியையும் காட்டினர். இருண்ட குகையின் எதிர் முனையில் வெளிச்சம் - மங்கலாக இருந்தாலும் - தோன்றியது. சாதாரண குடும்பப் பின்னணியிலிருந்து உயர்ந்த பதவிக்கு வந்த அரசியல் தலைவர்கள் வரிசையில் நிதீஷ் குமார், மாயாவதி போன்று பலர் உள்ளனர். ஆனால், அர்விந்த் கேஜ்ரிவால் வித்தியாசமானவர். அந்த வித்தியாசம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சாதி அல்லது மத அடையாளத்தைச் சொல்லிக்கொண்டு கேஜ்ரிவால் அரசியல் வெற்றியைப் பெறவில்லை. ஊழலுக்கு எதிராக அனைத்து இந்தியர்கள் உள்ளத்திலும் கனிந்துகொண்டிருக்கும் கோபத்தை விசிறிவிட்டு ஆதரவைப் பெருக்கிக்கொண்டார்.

பிறகு வீழ்ச்சி ஆரம்பித்தது. ஆட்சியில் 49 நாட்கள் இருந்தபோது அரசு நிர்வாக இயந்திரத்தைக் கையாள முடியாமல் அசௌகரியமாக இருந்ததைப்போலத் தெரிந்தது. இதனாலேயே பதவியிலிருந்து விலகியது ஆ.ஆ.க. ட்விட்டரிலும் ஃபேஸ்புக்கிலும் கேலிகளும் கிண்டல்களும் உலவத் தொடங்கின. இந்த கேலி கிண்டல்களுக்கு அப்பால், அவருடைய பதவி விலகல் டெல்லிக்கு அப்பாலிருந்த அவருடைய ஆதரவாளர்களை வெகுவாகப் பாதித்தது. ஆ.ஆ.க அரசை, மாற்றத்துக்கான முன்மாதிரியாகப் பலர் பார்த்தார்கள். ஊழலற்ற எதிர்காலத்துக்கு அச்சாரம் என்று நினைத்தார்கள். அந்தக் கனவு கலைந்துவிட்டது. அதற்குப் பிறகு நடந்தது அதைவிட மோசமானது. மக்களவைப் பொதுத் தேர்தலில் ஆஆக 432 தொகுதிகளில் போட்டியிட்டது. சாமானிய மனிதர்களை மீட்க வந்த ரட்சகராகவே அர்விந்த் கேஜ்ரிவால் காட்டிக்கொண்டார். பிரதமர் நரேந்திர மோடி, ராகுல் காந்தி ஆகியோரைப் போல அவரையும் பிரதமர் பதவிக்கான வேட்பாளராகச் செய்தி ஊடகங்கள் பார்த்தன. ஆஆகவுக்கு ஆணவம் தலைக்கேறியது, தன்னம்பிக்கை பொங்கி வழிந்தது, தன்னை தேசியக் கட்சியாகவே நினைக்கத் தொடங்கியது. ஆனால், நீர்க்குமிழி போல அந்த ஆர்வம் வெடித்துவிட்டது. தேசிய அரங்கிலிருந்து ஆஆக துடைத்து எறியப்பட்டது. பஞ்சாபில் மட்டும் அந்தக் கட்சியின் 4 வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். அந்தக் கட்சியின் மையக் களமான டெல்லியிலிருந்து ஒருவர்கூட வெற்றி பெறவில்லை.

**தோல்வி யாருடையது?**

பொறுப்புகளைக் கைவிட்டதன் மூலம் அர்விந்த் கேஜ்ரிவாலும் அவருடைய சகாக்களும் பலருடைய கனவுகளை நொறுக்கிவிட்டனர். ஆம் ஆத்மியின் தோல்வி என்பது ஆ.ஆ.கவினுடையதோ, தனி நபருடையதோ அல்ல - இந்திய மக்களுக்கு அவர்கள் செய்யத் தவறிய கடமைதான் என்று நினைத்தேன். அவர்களால் மாற்று அரசை, மாற்று நிர்வாகத்தை அளிக்க முடியும் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் ஏற்படுத்தியிருந்தனர். அதைச் செய்ய முடியாமல் அவர்கள் உள்ளுக்குள்ளேயே நொறுங்கியதன் மூலம் சாதி, மதச் சார்பு இல்லாமல் அரசியல் கட்சிகள் எதிர்காலத்தில் உருவாகும் வாய்ப்பையும் பாழாக்கிவிட்டார்கள் என்று கருதினேன். மக்கள் மீண்டும் நினைக்கத் தொடங்கிவிட்டார்கள், தொழில்முறை அரசியல் வாதிகளை விட்டால், தங்களுக்கு வேறு கதியில்லை என்று. பழைய கட்சிகளின் முகங்களிலும், "அப்போதே நாங்கள் சொல்லவில்லை" என்ற கேலி தெரிந்தது.

இப்போது, டெல்லி விரும்பியது - விரும்புகிறது ஆஆக வெற்றிபெற வேண்டுமென்று கேஜ்ரிவாலின் கூட்டணியில் புதிய வழியை டெல்லி கண்டது. அவருக்கு மீண்டும் வாய்ப்பளித்திருப்பதன் மூலம் புதிய துணிச்சலான, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை டெல்லி வழங்கியிருக்கிறது. கேஜ்ரிவால் லட்சியவாதி அல்ல் ஆனால், உண்மையான மனிதர் என்று அடையாளம் கண்டது டெல்லி. அதன் விளைவு தேர்தல் களமே வியத்தகு மாற்றத்தைக் கண்டது. நம்முடைய கண்களிலிருந்து மறைந்துகொண்டிருந்த ஒளிப்பொறியை மீட்டு மீண்டும் பிரகாசிக்கச் செய்யும் வகையில் டெல்லிவாசிகள் தங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தியுள்ளனர்.

**டெல்லிக்கு மட்டுமல்ல**

இது டெல்லிக்கு மட்டுமல்ல, நமக்கும் நாம் எப்படி அரசியல் கட்சிகளையும் அரசியல் தலைவர்களையும் பார்க்கிறோம் என்பதையும் பற்றியது. பெரிய கட்சிகளைக் காணாமல் அடிப்பதைப் பற்றியதல்ல. நாட்டுக்கு முக்கியமான ஒரு கடமையை டெல்லிவாசிகள் நிறை வேற்றியிருக்கின்றனர். கட்சிகளுடைய செயற்பாட்டில் நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் இருந்தால், அவர்கள் கடந்த காலத்தில் தவறு செய்திருந்தாலும் அதை மன்னித்து ஏற்றுக் கொண்டு விடலாம் என்று உணர்த்தியிருக்கிறார்கள். மாற்றங்களில் நம்பிக்கை வேண்டும் என்பது ஒத்த அம்சம். மிகக் குறுகிய காலமே பதவியிலிருந்திருந்தாலும் அவர்கள் செய்த நன்மையை அங்கீகரிக்க வேண்டும் என்பது அடுத்தது. மிகப் பிரம்மாண்டமான பிரச்சாரம், அடுத்தடுத்த விளம்பரம் என்றெல்லாம் களத்தில் இடம்பெற்றாலும், தவறுகளை உணர்ந்து மன்னிப்புக் கேட்ட அக்கறையுள்ள அரசியல் கட்சிக்கும் அதன் வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க வேண்டும் என்பதைக் காட்டியிருக்கிறார்கள்.

நேர்மையான, வெளிப்படையான அரசியல் என்ற லட்சியத்தைப் பற்றவைத்துவிட்டு அணைத்த ஆ.ஆ.கவுக்கு வாக்களித்து, அந்தச் சுடரை மீண்டும் டெல்லி மக்கள் தூண்டியிருக்கிறார்கள். லட்சிய வாதம் மீண்டும் மையத்துக்கு வந்திருக்கிறது அது நிலைக்குமா, மறையுமா என்பது கேஜ்ரிவால் அரசின் வெற்றியைப் பொருத்திருக்கிறது. அவருக்கு இப்போது எதிர்க்கட்சியே இல்லை. எனவே, அவரே அவருக்கு எதிர்க் கட்சிபோலச் செயற்பட்டுக்கொள்ள வேண்டும். இது சாதாரண வேலையல்ல, டெல்லி மக்களுக்காக அல்ல் இந்திய மக்களுக்காக இந்தக் கடமையை அவர் நிறைவேற்றியே தீரவேண்டும். அப்படி நடக்குமா? காலம் மட்டும் தான் பதில் சொல்ல முடியும.

தஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் யோ.ஜெக ஆனந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## வடக்கு மாகாண சபையின் தீர்மானத்திற்கு எதிராக மேல் மாகாண சபையில் தீர்மானம்

(கொழும்பு)

வட மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக நேற்று முன்தினம் மேல் மாகாணசபையில் தீர்மனம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் இனச் சுத்திகரிப்பு இடம்பெற்றதாகவும் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் அண்மையில் வடக்கு மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த தீர்மானத்திற்கு பதிலடியாக மேல் மாகாணசபையில் நேற்று முன்தினம் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேல் மாகாணசபையின் ஆளும் கட்சி பிரதம அமைப்பாளர் சிசிர ஜயகொடியினால் தீர்மானம் அவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆளும் கட்சியின் மற்றுமொரு உறுப்பினரான மெரில் பெரேரா இந்த தீர்மானத்தை வழிமொழிந்துள்ளார்.

ஆளும் எதிர்க்கட்சிகளின் இணக்கத்துடன் இந்த தீர்மானம் ஏகமனதாக மேல் மாகாணசபையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ-5)

# போதைப் பொருட்களை கடத்த உதவியிருந்தால் கடும்தண்டனை

## பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த உழவியந்திரங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்படிருந்தது. இதற்கு சுங்கத் திணைக்களத்திலிருந்து யாரேனும் உதவி வழங்கி இருப்பின் அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்படும் என சுங்கத் திணைக்கள பணிப்பாளர் ஜகத் டி.வீரவர்த்தன தெரிவித்துள்ளார்.**

குறித்த உழவியந்திரங்கள் எவ்வாறு கொண்டுவரப்பட்டன என தற்போது போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு எமது ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுங்க தலைமையகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

குறித்த போதைப்பொருள் மிகவும் சூட்சுமமான முறையிலேயே கொண்டுவரப்பட்டுள்ளதெனவும் பல சிக்கல்களுக்கு மத்தியிலே தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென அவர் தெரிவித்தார்.

மேலும் சட்டவிரோதமாக கொண்டு வரப்படும் பொருட்கள் குறித்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மிகவும் அவதானத்துடன் கண்காணித்து வருகின்றனர்.

தற்போது மயக்கம் ஏற்படுத்தும் போதைப்பொருள் வகை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளது. இலங்கையில் குறித்த போதைப்பொருள் பாவனை மிக குறைத்தளவிலே உள்ளது.

போதைப்பொருள் தொடர்ப்பில் அவதானத்துடன் செயற்படுவதோடு அது குறித்து விசேட பயிற்சிகளும் சுங்கத்திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதென அவர் தெரிவித்தார். இலங்கையிலுள்ள போதைப்பொருள் பாவனையை முற்றிலும் குறைப்பதற்காக தாம் செயற்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# தலைமையின் ஆணையினையும் மீறி சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் நுகேகொடையில் நடத்தப்பட்ட கூட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையின் ஆணையையும் மீறி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பங்கேற்றுள்ளனர்.

மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான டி.பி ஏக்கநாயக்க, சாலிந்த திஸாநாயக்க, மனுஷ நாணயக்கார, குமார வெல்கம, சி.பி ரட்நாயக்க மற்றும் ஜெயந்த கெட்டேகொட ஆகியோரே இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தக்கூட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, மேல்மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக்கட்சி மற்றும் கம்யூனிசக் கட்சியின் தலைவர்கள் இந்தக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை. முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலகவும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேர்தல் முறைமையை மாற்றாமல் பொதுத்தேர்தல் நடத்த வேண்டாம்

### சோபித தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யாமல் பாராளுமன்றத் தேர்தலுக்கு செல்ல வேண்டாம் என நீதியான சமூகத்துக்கான தேசிய செயற்றிட்டத்தின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் அதனை செயற்படுத்த முடியாவிடின், பாராளுமன்றத்தைக் கலைக்காது நாட்களை நீடித்தாவது தேர்தல் முறைமையில் மாற்றத்தை கொண்டுவரவேண்டும் என அவர்



தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-5)

## தமிழக மீனவர்களின் மீது கடற்படையினர் தாக்குதல்

இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை இழந்த நிலையில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆட்சி அமைந்த பின்னர் முதன் முறையாக தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளது.

கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது நேற்று இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையின் தாக்குதலில் ஒரு ஜிபிஎஸ் கருவி, மீன்கள் இருப்பைக் கண்டறியும் கருவி ஆகியன சேதப்படுத்தப்பட்டுள்ளன என மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### நினைவாற்றல்

வாழ்க்கையிலே நமக்கு நினைவாற்றல் இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம். இயற்கையாக ஒருவருக்கு இருக்கிற நினைவாற்றலைவிடப் பயிற்சியினாலேயும் இதனை வளர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். இந்தப் பயிற்சியில் 3 நிலைகள் ரொம்ப முக்கியம்.

1. அறிதல்
2. நினைவில் நிறுத்துதல்
3. மீண்டும் கூறிப் பார்த்தல்

ஒரு முக்கியமான வாசகத்தைப் படித்து புரிந்துகொண்டதன் பின் அதை உரக்க மீண்டும் ஒருமுறை சொல்வது பல நல்ல பயன்களை அளிக்குமாம். அதன் மூலமாக நமது கேள்விப் புலனும் செயல் பதிவும் நன்றாக வலுப்பெறுதாம்.

கிடைத்த விபரங்களை நினைவிலே வைத்துக்கொள்வதை விம்ப நினைவுகள் என்று சொல்கிறார்கள். அந்த விபரங்களை ஆராய்ச்சி செய்து பழசுக்கும் புதுசுக்கும் உள்ள தொடர்புகளை ஏற்படுத்துவது தர்க்க நினைவு எனப்படுகிறது. இதனாலே தான் நாம் சரிவரப் புரியாததை நினைவிலே வைத்திருப்பதை விட, நன்றாகப் புரிந்ததை நினைவிலே வைத்திருப்பதற்கு எளிதாக இருக்கின்றது.

பொருள் விளங்காத ஒரு வாசகத்தை மனனம் செய்தால் அது நினைவிலே நிற்காது. இதற்கு மேலே உணர்ச்சி நினைவென்று ஒன்று இருக்கிறது. இது மிகவும் பயனளிக்கும்.

ஒரு புத்தகத்திலோ, திரைப்படத்திலோ இருக்கின்ற ஒரு சுவையான பகுதி நம் நினைவிலே ஆழமாக பதிந்திருக்கிறது. நரம்பு மண்டலத்தை நல்ல நிலையிலே வைத்திருப்பது நினைவாற்றலுக்கு மிகவும் முக்கியம்.

நல்ல உழைப்பும் உள்ள தூண்டல்களும் இதற்கு உதவி செய்யுமாம். ஒருவரை அதிகமாகச் சோர்வடையச் செய்வது அதிகமான உழைப்பில்லையாம். குறைவான உழைப்புத்தானாம்.

இரவு நேரத்திலே குறிப்பாக காலை 2 மணியிலிருந்து 4 மணி வரைக்கும் நினைவாற்றல் மிகவும் மந்தமடைகிறதாம். அதே போல் பகலிலும் மதியம் 12 மணியிலிருந்து 2 மணிவரை நினைவாற்றலை பொறுத்தவரை பலவீனமான காலம் எனலாம்.

காலையிலே 8 மணி முதல் 12 வரைக்கும் மதியம் 2 மணியிலிருந்து 5 மணி வரைக்கும் மனிதனின் திறமைகள் மிகவும் உயர்ந்த நிலையிலே இருக்கிறது. தீவிரமான வேகத்தோடு மூளை எந்த நேரத்திலும் வேலை செய்கிறதோ அந்த நேரத்தில் நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ளவும். அப்படிப் பயன்படுத்திக் கொண்டாலும் கூட மறுநாள் முந்தைய நாள் கடந்த சம்பவங்களின் முழு விபரங்களையும் அப்படியே நம்மால் நினைவுக்குக் கொண்டு வர முடியுதாம்.

அரைமணி நேரத்திற்குள் ஒரு மனிதன் தான் பெற்ற விபரங்களில் 40 சதவீதத்தை மறந்து விடுகிறானாம். மறுநாள் 34 சதவீதம் தான் அவன் நினைவிலே நிற்கின்றதாம். மூன்றாவது நாள் அது 25 சதவீதமாக குறைந்து போகிறதாம்.

அதனால் மீண்டும் மீண்டும் கூறி பார்த்தாலும் அல்லது படிக்கிறதும் தாம் நினைவாற்றலுக்கு அடிப்படை. 15-20 நிமிடத்திற்கு பிறகு அதை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டுமாம். நினைவாற்றல் மேம்பட முறையான ஓய்வும் முக்கியம்.

30 நிமிடங்கள் பூரணமாக ஓய்வெடுத்துக் கொண்டு எந்த வேலையுமின்றி இருப்பவர்கள் தாங்கள் படித்ததிலே 50-55 சதவீதம் வரை மீண்டும் நினைவு படுத்தி கூற முடியுமாம்.

வேறு வேலையிலும் அவர்களுக்கு கவனம் இருந்தால் 25 சதவீதம் தான் அவர்களுக்கு நினைவுக்கு வருமாம். ஏதாவது ஒன்றை படித்த பின்பு மனதுக்குள்ளே அதை கூறிப்பாருங்கள். அது நினைவுக்கு வரவில்லையென உடனே புத்தகத்தை கையில் எடுத்து பார்க்காதீர்கள்.

அதை எப்படியாவது நினைவிற்கு கொண்டு வர முயற்சி செய்யுங்கள். இதை படித்ததை நீங்கள் நீண்ட நாள் நினைவிலே வைத்திருக்கப் பயன்படும். ஒருவேளை அது நினைவுக்கு வராமல் போனால் புத்தகத்தை பிரித்து பார்க்கலாம். இப்படி மீண்டும் மீண்டும் இதே பயிற்சியில் ஈடுபடலாம்.

மாணவர்கள் படித்த வாக்கியங்களை அப்படியே பரீட்சையிலே எழுத முயற்சிக்காமல் அதை மனதில் வைத்துக் கொண்டு அதில் உள்ள கருத்துக்களை மட்டும் உள்வாங்கிக் கொண்டு தமது சொந்த வாக்கியங்களிலே எழுதுவது பயனளிக்கும்.

பழக்கம்-பயிற்சி என்பது மிகவும் முக்கியம். ஒரு பழக்கம் உடம்போடு ஒட்டிப் போய் விட்டது என்றால் அதை மாற்றுவது மிகவும் கஷ்டம். அது நல்ல பழக்கமாக இருந்தால் நல்லது. நாம் சாதாரணமாய் பேருந்தில் போகும் போது குழுக்கள் அதிகமாக இருக்கும். பேருந்தும் வீதியும் மோசமாக இருந்தால் இன்னும் நிலைமை மோசமாகிவிடும். அந்த நேரத்திலே நாம் ஒரு தாளை எடுத்து ஏதாவது எழுத வேண்டும் என்று நினைத்தால் எழுத்து ஒழுங்காக வராது மீறி எழுதினால் கோழி கிண்டியது மாதிரி இருக்கும்.

ஆனால் அந்தப் பேருந்தில் வரும் நடத்துநர் அந்த ஆட்டத்திலேயேயும் குலுக்கத்திலேயேயும் எழுதி எழுதி பழக்கப்பட்டிருப்பார். அதனால் இன்வாய்ஸ் நோட்டில் உள்ள சிறு கட்டத்தில் கூட சரியாக இலக்கத்தை போடுவார்.

அவருக்கு எது பிரச்சினை தெரியுமா? அன்றைக்கு அவருக்கு விடுமுறை நாள். வீட்டிலிருந்தார் அவர். நண்பருக்கு கடிதம் எழுத வேண்டும் என்று ஆரம்பித்தார். மேசையில் வைத்து எழுதினார் எழுத வரவில்லை. மகனை அழைத்து மேசையை வேகமாக ஆட்ட சொன்னார் பின்பு தான் சரியாக எழுதினார். இதுதான் பழக்கத்துடைய வலிமை.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி ஆயுதம் தூக்கப் போவதில்லை

"**கொ**ரில்லாவில் தொடங்கி " கண்டி வீரன் வரையிலும் தமிழ் இலக்கியப் பரப்பின் தனித்துவக் குரல். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இயங்கி, பின்னர்



அதிலிருந்து விலகி, விடுதலை புலிகளை இப்போது வரை கடுமையாக விமர்சித்து வருபவர். சமகாலத்தின் சிறந்தகதை சொல்லிகளில் ஒருவரான ஷோபா சக்தி, இப்போது கதாநாயகன். தீபன் என்ற பிரெஞ்சு திரைப்படம் ஒன்றில் நடிக்கிறார். பாரீஸிலிருந்து ராமேஸ்வரத்தில் கடைசிக்கட்டப் படப்பிடிப்புக்காக வந்திருந்தவரிடம் பேசினோம்...

பிரான்ஸில் புகழ்பெற்ற இயக்குநர் ஜாக் ஓடியார் இப்போது இயக்கும் படம் தீபன். ஈழத்தின் யுத்தச் சூழலிலிருந்து தப்பித்து புலம்பெயர்ந்து பிரான்ஸ"க்கு வரக்கூடிய மூன்று பேரைப் பற்றியது. அகதியாக வந்து புதுநாட்டில் புதுச் சூழலில் எப்படி வாழ்கிறார்கள், அதற்காக எப்படிப் போராடுகிறார்கள் என்பது கதை. அதில்தான் நான் நடித்திருக்கிறேன். திடீரெனக் கூப்பிட்டார்கள். திரைக் கதையில் வேலைபார்க்க அழைக்கிறார்கள் என நினைத்துதான் போனேன். ஆனால், நடிக்கச் சொல்லிக்கேட்டு, நான் நடித்து, படமே முடிந்து விட்டது.

**"நடிப்பை எப்படிச் சமாளித்தீர்கள்?"**

நான் குழந்தைப் போராளி மட்டும் இல்லை குழந்தை நடிகனும் கூட. பத்து வயதிலிருந்தே கூத்துகளில் நடித்திருக்கிறேன். பிரான்ஸ"க்குச் சென்ற பிறகு நாடகங்களில் நடிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்தப் படத்தில் நடிப்பதற்காக, ஒருவரை நியமித்து நடிக்கப் பயிற்சி கொடுத்தார்கள். முதல் தடவையாக வாழ்க்கையில் பிடித்த வேலையை, சம்பளம் வாங்கிக்கொண்டு செய்கிறேன்.

**"இது என்ன எழுத்தாளர்கள் சினிமாவுக்குள் நுழையும் காலமா?"**

இலக்கியவாதிகள் சினிமாவுக்குச் செல்லும் போது சினிமாவை ஓர் அங்குல மேனும் முன்னே நகர்த்த வேண்டும். ஆனால், இலக்கியத்தில் அவ்வளவு தரத்தைப் பார்க்கும் நமது எழுத்தாளர்கள், சினிமாவில் அனைத்து சமரசங்களுக்கும் ஆட்பட்டு, மலினமான திரைப்படங்களில் பணி புரிகிறார்கள். வாயைத் திறந்தால்



"ரஜினி சார்", "மிஷ்கின் சார்" என வணிக சினிமாக் காரர்களாக மாறிவிடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை எந்தவிதமான வணிக சமரசத்துக்கும் ஆட்படாத படங்களில் மட்டும்தான் வேலைபார்ப்பேன். இந்த அடிப்படையில் இதுவே என் கடைசிப்படமாகவும் இருக்கக்கூடும்.

**"தமிழீழப் போராட்டம் இனி என்ன ஆகும்?"**

"இலங்கையில் இனி ஆயுதப் போராட்டம் சாத்தியமே இல்லை. ஆயுதப் போராட்டங்கள் உருவான காலகட்டம் வேறு. இன்று தலைமுறைகள் மாறிவிட்டன. நாம் 80களில் சிந்தித்ததுபோல இப்போதைய தலை முறையினர் சிந்திப்பது இல்லை. உலகம் முழுக்க இருந்த புரட்சிகரச் சூழல், தேசிய விடுதலைப் போராட்டங்கள், மார்க்ஸியச் சூழல்கள் இன்றைக்கு இல்லை. இலங்கையில் மட்டும் அல்ல... உலகம் முழுவதுமே இதுதான் நிலை.

சமீபத்தில் இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு, மைத்ரிபால சிறிசேன வெற்றி பெற்றுள்ளார். இதற்கு முந்தைய தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையின் மீது செல்வாக்கு செலுத்தும் சக்திகளாக விடுதலைப் புலிகள் இருந்தனர். ஆனால், இந்த முறை ராஜபக்ஷவைத் தோற்கடிக்க வேண்டும் என்ற சுயமுடிவை எடுத்து தமிழ் மக்கள் வாக்களித்தனர். இப்போது மக்களின் மன நிலை, நாம் நினைத்தது நடந்துவிட்டது என்பதுதான். தங்களின் செல்வாக்கு வரம்புக்கு உட்பட்டு மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்ததன் மூலம், மனதிலிருந்த கோபத்தின் சிறுபகுதியைத் தணித்துக் கொண்டார்கள். ஆனால், ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன வெற்றிபெற்ற தன் மூலம் தமிழர்களுக்கு எந்த நன்மையும் நடந்துவிடப்போவது இல்லை. சில தமிழர்களுக்கு அதிகாரத்தைச் சுவைக்கக் கொடுப்பதாலேயே, தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்துவிடாது.

**"மக்கள் போராட்ட இயக்கங்களின் செயல்பாட்டுக்குக்கூட இனி சாத்தியம் இல்லையா?"**

"அத்தகைய மக்கள் போராட்ட இயக்கத்தைக் கட்ட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு லாயக்கு இல்லை அவர்களிடம் அப்படி ஒரு நோக்கமே இல்லை. கூட்டமைப்பினர், இந்த நாடாளுமன்ற அமைப்பு முறைக்குள் பதவிகளைப் பெற்று அதிகாரத்தைச் சுவைப்போரின் அங்கமாகவே மாறிவிட்டனர். ஆனால், இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத்தான் காலம், காலமாக மக்கள் ஆதரித்தும் வந்துள்ளனர். ஒருவகையில் பார்த்தால் விடுதலைப் புலிகள், ஈ.பி. ஆர்.எல்.எஃப், ப்ளாட் போன்ற ஆயுதம் தாங்கிய இயக்கங்களைவிட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரவாயில்லை. அவர்கள் யாரையும் கொலை செய்ய வில்லை. இந்த இயக்கங்கள் இவ்வளவு உயிர்களைக் கொடுத்து, இவ்வளவு மக்களைப் பலிகொடுத்து சாதித்தது என்ன? கொழும்பிலிருந்த இராணுவத்தை இழுத்துக் கொண்டுவந்து அல்லைப்பிட்டியில் விட்டதுதான் மிச்சம். இலங்கையில் தமிழர் தரப்பிலும் சிங்களர் தரப்பிலும் சேர்த்து இதுவரை மூன்று மிகப்பெரிய ஆயுதப் போராட்டங்கள் நடந்துள்ளன. மூன்றிலுமே ஆயுதம் தூக்கியவர்கள், மக்களுக்கு எதிராகத்தான் மாறினார்கள்.

அதனால் மக்களுக்கு ஆயுதப் போராட்டங்கள் மீது என்றென்றைக்கும் மறக்கவியலாத கசப்பான நினைவுகள்தான் மிஞ்சியிருக்கின்றன. நாம் விளைவுகளை வைத்துதான் ஒவ்வொன்றையும் மதிப்பிட வேண்டியுள்ளது. அப்படிப் பார்த்தால் ஆயுதப் போராட்டத்தைவிட தேர்தல் அரசியல் சிறந்தது. நாங்கள் தப்பித்து விட்டோம். ஆனால், யுத்தத்திலும் அதற்குப் பிறகும் அங்கு சிக்கிக்கொண்டிருக்கும் மக்களின் நிலைமை என்ன? பிள்ளைகள் பள்ளிக்கூடம் போக வேண்டும், மக்கள் வேலைக்குப் போக வேண்டும், சாப்பிட வேண்டும், உயிர் பயம் இல்லாமல் நிம்மதியாக வாழ வேண்டும்... இதற்கு, சுமுகமான சமூக வாழ்க்கை வேண்டும். இதைத்தான் மக்கள் விரும் புகின்றனர். உலகத்திலேயே மிகக் கடுமையான ஆயுதப் போராட்டத்தை நடத்திப் பார்த்து விட்டுத்தான், இந்த மனநிலைக்கு மக்கள் வந்துள்ளனர். முள்ளிவாய்க்காலில் கடும் சண்டை நடந்து கொண்டிருந்த போது குரோஷியா ஜனாதிபதி சொன்னதை இங்கு நினைவு கூர்கிறேன்...

(தொடரும்)

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகோஹறாம் தீவிரவாதிகள் 300 பேர் கொன்று குவிப்பு

## நைஜீரிய இராணுவம் மூர்க்கம்

(போர்னோ)

**ஆபிரிக்காவில் உள்ள நைஜீரியா மற்றும் அதை சுற்றியுள்ள நாடுகளில் போகோஹறாம் தீவிரவாதிகள் அட்டகாசம் செய்து வருகிறார்கள். அவர்கள் மீது நேற்று முன்தினம் நைஜீரிய இராணுவம் விமானம் மூலம் தாக்குதல் நடத்தியது. போர்னோ பிராந்தியம் மற்றும் வடக்கு பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 300 தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருப்பதாக நைஜீரிய இராணுவம் அறிவித்துள்ளது.**



இதற்கிடையே அபதான் என்ற இடத்தில் உள்ளூர் தலைவர் ஒருவர் மரணமடைந்தார். அவர் இறுதி சடங்கு நிகழ்ச்சியில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

அவர்கள் தீவிரவாதிகள் என கருதி விமானப்படை குண்டு வீசியது. இதில் 37 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரிய இராணுவம் விமான தாக்குதல் நடத்தி தீவிரவாதிகள் அதிகளவில் கொன்றது இதுவே முதல் தடவையாகும்.

தொடர்ந்து அனைத்து பகுதிகளிலும் விமான தாக்குதல் நடத்தப்படும் என்று இராணுவம் மேலும் அறிவித்துள்ளது. (இ-5)






# போலியோதடுப்பு ஊழியர்கள் நான்கு பேர் கடத்திக் கொலை

பாகிஸ்தானில் போலியோ நோயை தடுப்பதற்கு சொட்டு மருந்து வழங்கும் முகாம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் சொட்டு மருந்து வழங்க தலிபான் தீவிரவாதிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

மேலைநாடுகள் வழங்கும் போலியோ சொட்டு மருந்தில் ஆண்களுக்கு மலட்டுத் தன்மை ஏற்படுத்தும் மருந்துகள் கலக்கப்பட்டிருப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். எனவே போலியோ மருந்து வழங்க எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த பணிகளில் ஈடுபடும் ஊழியர்களை கடத்திச் சென்று கொலை செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். பலுசிஸ்தானில் உள்ள சோகப் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை போலியோ மருந்து வழங்குவதற்காக ஊழியர்கள் சென்றனர். அவர்கள் 4 பேரை தீவிரவாதிகள் திடீரென கடத்திச் சென்றனர். அவர்கள் கதி என்ன ஆனது என்று தெரியாமல் இருந்தது. அவர்கள் 4 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டு சடலமாக கிடந்தன என்பதை இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலிபான் தீவரவாதிகள் ஆதிக்கம் உள்ள வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணி தீவிரவாதிகளால் பாதிப்படைவதால் அங்கு ஏராளமான குழந்தைகளுக்கு போலியோ நோய் தாக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அல்-கொய்தாவின் பெயரை மாற்ற ஓபாமா பின்லேடன் விருப்பமாம்



உலகளாவிய பயங்கரவாத அமைப்பு என்று அல்-கொய்தா அங்கீகாரம் செய்யப்பட்ட அதிருப்தியில், அமைப்பின் பெயரை ஒசாமா பின்லேடன் மாற்ற விரும்பினார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் வோஷிங்டன் பென்டகன் இராணுவ தலைமையகம் மீதும், நியூயோர்க் உலக வர்த்தக மையத்தின் 110-மாடி இரட்டை கோபுரத்தின் மீதும் விமானங்களை மோதி கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

3 ஆயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்ட இந்த தாக்குதல்களை மூளையாக இருந்து செயற்படுத்தியவர் அல்-கொய்தா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் பின்லேடன்.

இந்த பின்லேடன் பாகிஸ்தானில் அப்போட்டாபாத் என்ற இடத்தில் பதுங்கியிருந்தபோது, கடந்த 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி அமெரிக்க இராணுவம் "ஆபரேஷன் நெப்டியூன் ஸ்பியர்" என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை எடுத்து கொன்றது.

இந்நிலையில் உலகளாவிய பயங்கரவாத அமைப்பு என்று அல்-கொய்தா அங்கீகாரம் செய்யப்பட்ட அதிருப்தியில், அமைப்பின் பெயரை ஒசாமா பின்லேடன் மாற்ற விரும்பினார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தாக்குதலில் உயிரிழப்பதற்கு முன்னதாக அல்-கொய்தா அமைப்பின் பெயரை இஸ்லாமுடன் மிகவும் நெருக்கம் கொண்டது என்பதை அடையாளம் காட்டும் விதமான பெயரை வைக்க பின்லேடன் விரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்டோட்டாபாத்தில் ஒசாமா பின்லேடன் மறைந்திருந்த இடத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

ஆளெடுப்பு முயற்சி, தங்கள் கொடியினை நாட்டுவதில் வெற்றியுடைய இது உதவியாக இருக்கும் என்று ஒசாமா பின்லேடன் எண்ணியதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கிய கப்பலில் தங்கப்புதையல் கண்டுபிடிப்பு



இஸ்ரேல் நாட்டில் செசெரியா என்ற இடத்தில் பழைமை வாய்ந்த துறைமுகம் ஒன்று உள்ளது. இதன் அருகே 1000 ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கி கிடந்த கப்பல் ஒன்றை புதைபொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். அந்த கப்பலுக்குள் ஏராளமான தங்க நாணயங்கள் இருந்தன. இதுவரை 9 கிலோ தங்க நாணயத்தை கைப்பற்றி உள்ளனர். மேலும் ஏராளமான நாணயங்கள் இருக்கலாம் என கருதி தொடர்ந்து தேடுதல் வேட்டை நடந்துவருகிறது.

அரபுநாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகள் பலவற்றை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாதிவித் கலிபக் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் காலத்தில் எகிப்து நாட்டிலிருந்து செசெரியா துறைமுகத்துக்கு கப்பலில் இந்த தங்க நாணயம் கொண்டு வந்திருக்க வேண்டும். அப்போது கப்பல் கடலில் மூழ்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

இந்த கப்பலை புதைபொருட்களை தேடும் குழு ஒன்று கண்டுபிடித்தது. ஆனால் அதில் உள்ள தங்கம் அனைத்தும் அரசுக்குதான் சொந்தம் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது. இதனால் புதைபொருளை கண்டுபிடித்த குழுவுக்கு எந்த பலனும் இல்லாமல் போனது எனக் கூறப்படுகிறது. (இ-5)

# தீவிரவாதிகளின் தற்கொலைத் தாக்குதலில் 20 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 20 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகியுள்ளனர் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் லோகார் மாகாணத்தின் புல்-இ-அலாம் நகரில் காவல் நிலையத்தில் தலிபான் தீவிரவாதிகள் வெடி குண்டை வெடிக்க செய்துள்ளனர்.

தலிபான் தீவிரவாதிகள் பொலிஸ் உடையை அணிந்து சென்று காவல் நிலையத்தில் தாக்குதல் நடத்தி [illegible]

முதல் தீவிரவாதி காவல் நிலைய தலைமையகத்திற்கு வெளியே உள்ள கேட்டில் வைத்து வெடிக்க செய்துள்ளான். இரண்டாவது தீவிரவாதி காவல் நிலையத்திற்குள் வெடிகுண்டை வெடிக்க செய்துள்ளான்.

பிற தீவிரவாதிகள் காவல் நிலைய வளாகத்தில் உள்ள உணவகத்திற்குள் வேகமாக ஓடிச் சென்று தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் அதிகாரிகள் பலர் உயிரிழந்தனர் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் மொத்தம் 20 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் பொதுமக்களில் இருவரும் அடங்கும். காயம் அடைந்த 8 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தீவிரவாதிகள் பொலிஸாரின் உடையில் இருந்ததால், தலைமையகத்திற்கு வந்தபோது சந்தேகம் எதுவும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

அண்மையில் ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் பாதுகாப்பு படையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடை வன்முறை குறித்து ஆராய குழுவொன்று நியமனம்

வெலிக்கடை சிறைச்சாலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பில் தகவல்களையும் சாட்சியங்களையும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இந்த குழுவை நியமித்துள்ளார். இந்த குழுவுக்கு ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி விமல் நம்புவசம தலைமை தாங்குவதுடன் ஏனைய உறுப்பினர்களாக முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசோக விஜயதிலக மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் சட்டத்தரணி எஸ்.கே.லியனகே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் எழுத்து மூலமாகவோ அல்லது 011 269 7908, 011 269 9812 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அறிவிக்கலாம். தகவல் வழங்குபவர்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்.

கொழும்பு 8, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை, 35 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கட்டடத்தின் நான்காவது மாடியில் இந்த குழுவின் செயலகம் இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அமைச்சுப் பதவி இல்லாவிட்டாலும் ஜனாதிபதியுடன் இணைந்திருப்பேன்

(கொழும்பு)

அமைச்சுப் பதவி இல்லாவிட்டாலும் ஜனாதிபதியுடன் இணைந்திருப்பேன் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு தேவையானவற்றைச் செய்யக்கூடிய ஒரே நபரே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமைச்சரவை அமைச்சு கிடைக்காவிட்டாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக செயற்படுவேன்.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு சில கட்சிகள் கொண்டுள்ள அரசியல் நிலைப்பாடுகள் குறித்து எந்த வகையிலும் திருப்தி அடைய முடியாது.

நல்லாட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அரசாங்கம் தெரிவிப்பதில் பயனில்லை. அதனை செயலில் காண்பிக்க வேண்டுமென ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (இ-5)

# போர்க்குற்றவாளி என தீர்ப்பு வழங்கியபோது நீதிமன்றத்திற்கு அருகே குண்டு வெடித்தது

பங்களாதேஷில் சுதந்திர போர் காலப்பகுதியான, 1970களில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்தார் என குற்றஞ் சாட்டப்படுகிற, மிகப் பெரிய இஸ்லாமிய வாதக் கட்சியொன்றின் மூத்த தலைவர் ஒருவருக்கு அந் நாட்டு நீதிமன்றமொன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித் துள்ளது. ஜமாத்-இ- இஸ்லாமி என்ற கட்சியின், மூத்த உறுப்பினரான அப்துஸ் சுபஹான் என்ற 79 வயதுடைய இவர், கொலை, இனப்படுகொலை மற்றும் சித்திரவதை போன்ற ஆறு வெவ்வேறு குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கிக் கொண்டிருந்த போது, அரச எதிர்ப்பு ஆர்வலர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களால் வீசப்பட்ட மூன்று குண்டுகள் மத்திய டாக்காவில் அமைந்துள்ள இந்த நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே வெடித்தன. இதே வேளை இந்த வழக்கில் மேன்முறையீடு செய்யவுள்ளனர் என அப்துஸ் சுபஹானின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 60 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 50 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 110 | 200 |
| தக்காளி | 220 | 120 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 100 | 80 | 70 | 80 |
| கரட் | 200 | 120 | 80 | 200 |
| பூசணி | 100 | 100 | 70 | 120 |
| புடோல் | 60 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 160 | 140 | 90 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 150 | 250 |
| பீற்றூட் | 60 | 80 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | — | 600 | — | 50 |
| போஞ்சி | — | 150 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 40 | — |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 110 | 130 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 60-100 | 120 | — | 160 |

# ஊழல் மோசடியில் ஈடுபட்ட எவருக்கும் மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

**(கொழும்பு) சீனாவின் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட எவருக்கும் மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இது அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இதனை சீனப் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் சபையில் தெரிவித்துள்ளார்.**



கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக நிபுணர்குழு மற்றும் அமைச்சரவை உபகுழு ஆகியவற்றின் விசாரணை அறிக்கைகளுக்கு அமைவாக தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியாளர்கள் இத்திட்டத்தினை வெளிப்படைத்தன்மையாக முன்னெடுக்கவில்லை. உண்மைகளை மூடி மறைத்தனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை 23/கீழ் இரண்டு பிரிவின் பிரகாரம் விசேட கூற்றொன்றை முன் வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவின் கொழும்பு துறைமுகத் திட்டம் தொடர்பாக கடந்த சில காலங்களாக ஊடகங்களிலும் அரசியல் கட்சிகள் மத்தியிலும் பலதரப்பட்ட கருத்துக்களும் விவாதங்களும் நாட்டுக்குள் இடம்பெற்று வருகின்றன.

கொழும்பு துறைமுக நகரத்திட்ட நிர்மாணம் தொடர்பாக கடந்த ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் சட்ட ரீதியான அல்லது ஒழுக்க ரீதியான கடப்பாடுகள் எதுவும் காணப்படவில்லை யென்பதை நாம் அன்று இச்சபையில் தெளிவுபடுத்தினோம்.

கேள்விகளைக் கேட்டோம் பதில்களை எதிர்பார்த்தோம். அன்றைய சபைத்தலைவர் நிமால் சிறிபால டி சில்வா கீழ்க்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

2014 பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி ஹன்சாட் அறிக்கையில் இவ்வாறு பதியப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைத்தும் சட்ட திட்டங்களுக்கமைய ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான ஆவணங்கள் இச்சபையில் முன் வைக்கப்படும் என்று அன்று சபை முதல்வர் தெரிவித்தார்.

ஆனால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டு 11 மாதங்கள் கடந்தும் நிமால் சிறிபால டி சில்வா உட்பட கடந்த அரசாங்கம் இது தொடர்பில் எதனையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இதேவேளை அன்றைய பிரதமர் டி.எம்.ஜயரத்னவும் 2014 மார்ச் 4ஆம் திகதி இத்திட்டம் தொடர்பான ஆய்வறிக்கையை சபைக்கு சமர்ப்பிப்பதாக தெரிவித்தார். ஆனால் ஜனாதிபதித்தேர்தலில் தோல்வியடையும் வரையில் அவ்வாறான எந்தவொரு அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை. இத்திட்டம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட அனைத்து விடயங்களிலும் வெளிப்படைத்தன்மை காணப்பட வில்லை.

சட்ட ரீதியான பல விடயங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. இத்திட்டம் தொடர்பான உடன்படிக்கை அமைச்சரவை அனுமதியின்றியே கையெழுத்திடப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு

## தியாகர் சாமிநாதன்



யாழ்.நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொட்டடி, லண்டன் Colliers wood ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகர் சாமிநாதன் கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு Chak 89,105 Bond Road, Mitcham CR4 3HG, United Kingdom என்னும் முகவரியில் நடை பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## நாகமணி வாசுதேவன்



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் Toronto கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி-வாசுதேவன் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை பி.ப 5 மணிமுதல் Marka Chappel Fone Ridge Funeral Home என்னும் முகவரியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஒருமணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## சபாபதி சின்னராஜா

(அரசமரக்கூட்டுத்தாபனஒப்பந்தகாரர்)



யாழ்.மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவடமாகவும் கொண்ட சபாபதி சின்னராஜா கடந்த17 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை அன்று கனடாவில் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று வெள் ளிக்கிழமை பி.ப 5 மணி முதல் Chapel Ridge Fu neral Home,8911 Woodbine Avenue Ma rkham,ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## திருமதி.ஜெகதீஸ்வரி கணேசலிங்கம்



யாழ்ப்பாணம் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் இல.51, முதலாம் குறுக்குத்தெரு வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.ஜெகதீஸ்வரி கணேசலிங்கம் கடந்த 17ஆம் திகதி காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்ல ப்படும்.

## கந்தையா பாலசுந்தரம்



யாழ்ப்பாணம் நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா-பாலசுந்தரம் கடந்த 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## வீரவாகு கனகசுந்தரசுவாமி

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளரும் த.தே.கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினரும்)



புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட வீரபாகு கனகசுந்தரசுவாமி கடந்த 17 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலமானார். அன் னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பி.ப 2மணிய ளவில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3மணிய ளவில் புதுக் குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புலம்பெயர் உறவுகள் உதவ வேண்டும்

## வடக்கு சுகாதார அமைச்சர் அழைப்பு

யுத்தத்தின் கோரத் தாண்டவத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர் உறவுகளின் உதவி அவசியமானது. எனினும், அவர்களது உதவி சரியான முறையில் பாதிக்கப்பட்டவர்களை சென்றடைவதை உறுதிப்படுத்தவேண்டிய தேவையும் உள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் வவுனியா உப பணிமனையில் புலம்பெயர் மருத்துவக்குழுவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதுஅவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்தகால யுத்தத்தின் பாதிப்பினால், எமது மக்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்துள்ளனர். யுத்தத்தினால் கொல்லப்பட்டவர்களை விட, அதன் வடுக்களை சுமந்துகொண்டு அல்லற்படும் மக்களே மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். குறிப்பாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அங்கவீனர்களாகவும் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டு தாமாக இயங்க முடியாது, மற்றவர்களில் தங்கி வாழ்பவர்களின் நிலை பரிதாபத்துக்குரியது.

இதை விட, யுத்தத்தில் குடும்பத் தலைவர்களை தொலைத்து விட்டு குழந்தைகளுடன் அன்றாட வருமானத்துக்கு அல்லற்படும் குடும்பங்களும் உள்ளன. இவர்களுக்கான துரித மறுவாழ்வு செயற்றிட்டங்கள் செயற்படுத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனினும், முன்னைய மத்திய அரசு இவர்களுக்கான செயற்றிட்டங்கள் எதனையும நடைமுறைப்படுத்தவில்லை. இவற்றுக்கான நிதி மூலங்களை நாம், புலம்பெயர்ந்த உறவுகளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு சாத்தியங்கள் இருந்தும் ஆளுநரூடாக மத்திய அரசு முட்டுக்கட்டை போட்டது.

தற்போது அரசியல் சூழ்நிலை ஓரளவுக்கு மாறுவதாக உணருகின்றோம். எதிர்வரும் காலங்களில் இவ்வாறான உதவிகளை பெற்றுக்கொள்ள முதலமைச்சர் நிதியத்தை நிறுவ தீர்மானித்துள்ளோம். இது தொடர்பாக ஏற்கனவே பிரேரணையொன்று மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இனி வருங்காலங்களில் புலம்பெயர் மக்களால் வழங்கப்படும் நிதியுதவிகள் இந்நிதியத்தினூடாக பெறப்பட்டு சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சுகளினூடாக நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதனூடாக பெற்றுக்கொள்ளும ஒவ்வொரு சதத்துக்கும் வெளிப்படையான கணக்கியல் முறைமை பேணப்படும். எதிர்வரும் காலங்களில் புலம்பெயர் உறவுகளின் தார்மீக உதவியை நாம் எதிர்பார்க்கின்றோம்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் சிறுவர்கள், பெண்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள் முக்கியமானவர்கள். தற்போது எனது அமைச்சின் கீழ் இவ்வாறாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான துரித மறுவாழ்வு செயற்றிட்டங்களுடன் தொடர்பான புனர்வாழ்வு, சமூக சேவைகள், சிறுவர் நன்னடத்தை, பெண்கள் விவகார அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வரும் உதவிகள் சரியான முறையில் பாதிக்கப்பட்டவர்களை சென்றடைவதை உறுதிப்படுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது.

குறிப்பாக, வழங்கப்படும் உதவிகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புகூறல் என்பன அவசியம். எனவே இவற்றை ஒருங்கிணைத்து செயற்படக்கூடிய பொறிமுறையொன்றை எனது அமைச்சு செயற்படுத்த திட்டமிட்டுள்ளது. இதனூடாக இவ்வாறான நிதிமோசடிகளை தடுப்பதுடன், தேவையானவர்களுக்கு உதவி கிடைப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறான பொறிமுறை உதவிகளை ஒருங்கிணைப்பதற்காகவே அன்றி, கட்டுப்படுத்தும் நோக்கமல்ல.

எதிர்காலத்தில் சுகாதார மற்றும் புனர்வாழ்வு செயற்றிட்டங்கள் தொடர்பில் கரிசனையுள்ள அமைப்புகள் தனி நபர்கள் எனது மாகாண அமைச்சினை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார். (அ-2)




## தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்களில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக செயற்படவுள்ளவர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தெரிவத்தா ட்சி அலுவலரும் (உள்ளூராட்சி) தேர்தல்கள் உதவி ஆணையாளருமான இ.சசீதன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் சிரேஷ்ட தலைமை தாங்கும்அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்புக்கான அழைப்புக் கடிதங்களை கடமையாற்றவுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். எனவே நடைபெறவுள்ள தேர்தல்கள் தொடர்பான அறிவுறுத்தல் வகுப்பில் தவறாது அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் இப் பயிற்சி வகுப்பு மீண்டும் நடைபெறாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நடைபெறவுள்ள அறிவுறுத்தல் வகுப்பில் அறிவு றுத்தல் கோவையுடன் ஏனைய ஆவணங்களும் வழங்கப்படவுள் ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 15 சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தேர்தல் கடமையில் பங்கேற்கவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி செயலமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 15 அலுவலர்களும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு செல்லவுள்ளனர். (அ-2-15-254)


முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு விழா அண்மையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக

## ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருட்டு

(குருமன்காடு)

வவுனியா, நாகர் இலுப்பைக் குளம் பகுதியில் அமைந்துள்ள சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவ்ருவதாவது,

வழமைபோன்று பூசை வழிபாட்டிற்காக காலையில் ஆலயத்திற்கு பூசகர் வந்தபோது கதவுகள் உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்தார்.

இதனையடுத்து ஆலயத்தினுள் நுழைந்த பூசகர் அங்கிருந்த குத்து விளக்குகள்,அம்மனின்தாலிப்பொட்டு, வாள் உள்ளிட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார்மேலதிக விசாரணைகளைமேற்கொண்டனர். (2-250)

## வன்னியூர் செந்தூரனின் நூல்வெளியீடு

வவுனியா தமிழ்ச் சங்கம் வெளியிடும், வன்னியூர் செந்தூரனின் கற்சிலைமடு நாகம்மாள் ஆலய சரித்திரம் எனும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கற்சிலைமடு அருள்மிகு நாகம்மாள் ஆலய மணிமண்டபத்தில் நடைபெறும்.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம் பெறும் இவ்வெளி யீட்டு நிகழ்வில் ஆசியுரையை ஆலய அர்ச்சகர் சிவத்திரு.கந்தையா சிவராசா வழங்க வாழ்த்துரையை வைத்தியர் நா.வன்னியசிங்கம் நிகழ்த்துவார். தலைமையுரையைத் தொடர்ந்து வெளியீட்டுரையை முல்லைத்தீவு மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சமாசத்தின் பொது முகாமையாளர் சி.வேதவனம் ஆற்றுவார். விமர்சன உரையை கற்சிலைமடு மகாவித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா நிகழ்த்துவார். (அ-2)

## அறநெறி ஆசிரியர்களுக்கு கிளிநொச்சியில் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் அறநெறி ஆசிரியர்களுக்கான இறுதி நிலைக் கருத்தரங்கு நடத்தப்படுவது வழமையாகும்.

இந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட அறநெறிப் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இத்திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

மேற்படி கருத்தரங்கில் இறுதி நிலை பரீட்சைக்கான வழிகாட்டல் விரிவுரைகளும் இந்து சமய பொது அறிவுப் போட்டி, மாணவர்களின் பாடத்திட்ட மாற்றம், ஆசிரியர்களின் வருடாந்த கொடுப்பனவு, சீருடை வழங்கல் மற்றும் இவ் வருடத்திற்கான கிளிநொச்சி மாவட்ட அறநெறிப்பாடசாலைகளுக்கான உதவிகள், செயற்றிட்டங்கள் சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே அனைத்து அறநெறிப் பொறுப்பாசிரியர்களையும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

## போட்டிகளுக்கான ஆக்கங்கள் கோரல்

(மல்லாவி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமுதாய மருத்துவ துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டிக்கு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வீதி விபத்துக்களைத் தடுத்து உயிர் காப்போம் எனும் தலைப்பில் கட்டுரை போட்டியும் சுவரொட்டி போட்டியும் திறந்த போட்டியாக நடைபெறவுள்ளது.

எனவே துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களை பங்கு கொள்ளுமாறும் ஆக்கங்களை எதிர்வரும்24 ஆம்திகதிசெவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக துணுக்காய் கல்வி வலயத்திற்கு பாடசாலை அதிபர் ஊடாக அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

வெற்றி பெறும் மாணவர்களுக்கு வலய மட்டத்தில் பணப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# எமது கண்டல் வளத்தை காப்போம்...



(சென்றவாரத்தொடர்ச்சி...)

இலங்கையின் மிகப் பெரிய கண்டல் சூழற்றொகுதி புத்தளடச்சுக்குடா-போர்த்துக்கல்குடா தொகுதியாகும். இது 3 ஆயிரத்து 385 ஹெக்டேயர்பரப்பளவை உள்ளடக்கியது. இரண்டாவது பெரிய தொகுதி மட்டக்களப்பு என நம்பப்பட்டது.

2003 CZMP தரவின் படி மட்டக்களப்பு 1638 ha, யாழ்ப்பாணம் 1088 ha, புத்தளம் 478 ha பரப்பில் இக் கண்டல் காடுகள் காணப்படுவதுடன் ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மொத்த கண்டல் காடுகள் 6083 ha ஆக 2003 ஆம் ஆண்டளவில் குறைவடைந்துள்ளது.

### 2011 ஆம் ஆண்டளவில் இலங்கையின் கண்டல் காடுகள்

இலங்கையில் ஏறத்தாழ 40 கண்டல் இனங்கள் மரங்களாகவும், பற்றைகளாகவும், பூண்டுகளாகவும் காணப்படுகின்றன. இதில் பிரதானமான இனங்களாக Avicennia, Rhizophora, Bruguiera, Sonneratia கருதப்படுகிறது.

### இலங்கையின் பிரதான இனங்களாவன...

Avicennia sp, Bruguiera sp, Excoecaria aggalocha, Lumni tzera sp, Acanthus ilicifolius, Rhizophora sp, Sonneratia sp, Cynometrairipa, Aegiceras corniculatum, Ceriops tagal, Heretiera littoralis, Pemphis acidula, Nypa fruticans, Xylocarpus granatum, Scyphiphora hydro phyllaceae என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

விலங்குகளை நோக்கும்போது பறவைகள், இறால், நண்டுகள், மொலஸ்காக்கள், பொலிக்கீற்றாப் புழுக்கள், மீன்கள் போன்றவற்றையும் அங்கு காணலாம்.

### இலங்கையின் கண்டல் காடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

இலங்கையின் கண்டல் தொகுதி உல்லாசபிரயாணத் தொழில், இறால் பண்ணைகள் அமைத்தல், நகரவாக்கம், வீதி அபிவிருத்தி, மாசடைதல், விறகிற்காக அழிக்கப்படல் போன்ற காரணங்களுக்காக விரைவாக அழிக்கப்பட்டு வருகிறது.

### கண்டல்காடுகள் அழிக்கப்படல்

பெந்தோட்டை கண்டல் தொகுதி உல்லாசப் பிரயாண கைத்தொழிலினால் அதிகம் பாதிக்கப்பட்டது. புத்தளம்-கற்பிட்டி பகுதிகளில் உள்ள கண்டல் இறால் வளர்ப்பிற்காக அழிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரு தசாப்தங்களாக திட்டமிடப்படாமல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இறால் பண்ணைகள் காரணமாகவும் கண்டல்கள் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளன. நீர்கொழும்பு பகுதியின் Brushpile மீன்பிடி முறையினால் கண்டல் காடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.





வடக்கு-கிழக்கு மாகாணங்களிலேயே கண்டல் காடுகள் கடந்த கால யுத்தத்தினால் மிகவும் அழிவினை எதிர்நோக்கியிருந்தது. அத்துடன் இயற்கை அனர்த்தங்களினால் வடக்கு கிழக்கு வாவிகளில் காணப்படும் கண்டல் தாவரங்கள் அருகி வருகின்றன. இதனைத் தடுக்க, கண்டல் தாவரங்களை (கண்டல் கன்றுகளை) நடுவதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

கண்டல் தாவரமானது இயற்கை சமநிலையைப் பேணுவதுடன் இந்தத் தாவரங்களின் நிழல்களில் மீன்கள் இனப்பெருக்கம் செய்து வாழ்வதற்கு உகந்ததாக அமைகின்றது. இதனால் மீனினங்கள் பெருகி அப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கும் இவை பெரு மளவில் உதவுகின்றன.

களப்பு பிரதேசங்களிலுள்ள கண்டல் தாவரங்கள் கடல்நீர், நன்னீருடன் கலக்காமலிருப்பதற்கு பெரும் பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நன்னீர் உவர் நீராகாமல் தடுப்பதோடு விவசாயிகளுக்கும் மறைமுகமாக உதவி வருகின்றது.

மேலும் முருகைக் கற்பாறைகள், கடற்படுகைகள் என்பன சேதம் அடையாமல் பாதுகாக்க இது பேருதவிபுரிகின்றது. சூழலை மாசுபடுத்தும் காரணிகளைத் தனக்குள் உறிஞ்சி வைத்துக் கொள்வதிலும் இந்த கண்டல் தாவரங்கள் உதவுகின்றன.

இவ்வாறான காரணங்களால் எமது நாட்டின் கரையோரங்களை அண்டிய பகுதிகளின் வளத்தைப் பேணி, வனப்புமிக்கதாகவும் அழகிய நம் தேசத்துக்கு எழில் சேர்க்கவும் இந்த கண்டல் தாவரங்களை நாட்டி எமது கண்டல் வளத்தை பாதுகாப்போம்.

(முற்றும்)





இந்தக்கட்டுரையை எழுதியவர் திருமதி பிரதீபா சிவகுமார், விரிவுரையாளர், விலங்கியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம் ஆவார். தை மாதம் 23 ஆம் திகதி (23.01.2015) பகுதியில் தவறுதலாக பெயர் மாற்றிப் போடப்பட்டிருந்தது. இதனால் ஏற்பட்ட சங்கடங்களுக்கு மனவருத்தம் அடைகின்றேன்- ஆசிரியர், யாழ். விஞ்ஞான சங்கம், பிரிவு -A

## வாரத்திற்கு ஒரு புதிர்! 130

Atherosclerosis என்றால் என்ன?

புதிர் 130 இற்கான விடைகளை 02.03.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. A. C. தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:

**புதிர் 129 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,வட்டுக்கோட்டை

புதிர் 129 க்கான கேள்வியும் விடையும்:

பூமி அதிர்வை அளக்கும் உபகரணத்தின் பெயர் என்ன?

Seismograph/ seismo meter

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 130

சரியான விடை:-..........................

முழுப்பெயர்:-..........................

முகவரி:-..........................

தொ.பே. இல:..........................

கையொப்பம்:..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடப்பாறையை முழுங்கி விட்டு சுக்குக் கசாயமா?
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வேலைகள் செய்ய வேண்டாம்

வன்னியில் நடந்த இன அழிப்புத் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற ஜெனிவாத் தீர்மானத்திற்கு பங்கம் ஏற்பட்டுள்ளதை இப்போது உணர முடிகின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதை அடுத்து, போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து ஐ.நா சபை விலகிச் செல்லுகிறது என்ற உண்மையை சொல்லித்தானாக வேண்டும்.

போர்க்குற்றம் தொடர்பில் நடத்தப்படும் உள்ளக விசாரணை, மதிப்பீடு செய்யப்படும் என்று ஐ.நா சபையின் மனித உரிமைகள் பேரவை அறிவித்ததில் இருந்து மேற்போந்த உண்மை புரிகிறது.

ஆக, மைத்திரி ஜனாதிபதியாக வந்த பின்னர் இலங்கை மீது சர்வதேச விசாரணை இடம்பெறாதது என்பதற்கு இது நல்ல சான்று.

இங்குதான் தமிழ் அரசியல் தலைமைகளின் பலவீனம் வெளிப்படுகிறது. அதாவது வன்னிப் போர் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்றோ அல்லது போர்க்குற்ற விசாரணை குறித்த அறிக்கையை காலதாமதம் செய்யக் கூடாது என்றோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக வலியுறுத்தவில்லை.

போர்க்குற்ற விசாரணை அறிக்கை பிற்போடப்படுவதை எதிர்ப்பதாகக் கூட்டமைப்பு அறிவித்திருந்தாலும் ஐ.நா சபை மட்டத்தில் கூட்டமைப்பின் எதிர்ப்பு சென்றடையவில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை. இங்குதான் ஏன்? எப்படி? என்ற கேள்வி எழும்.

இந்தக் கேள்விக்கான பதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சிலர் அரசுடன் இணங்கிச் செல்கின்றனர். இன்னும் சிலர் அடுத்த ஆசனம் கிடைக்கவேண்டும் என்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். ஒரு சிலர் உண்மையாகத் தமிழ் மக்களை நேசிக்கின்றனர் ஆயினும் இவர்கள் சர்வதேச அமைப்புகளுடன் தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு கூட்டமைப்பின் முக்கிய தலைகள் தடைவிதித்துள்ளன.

சுருங்கக் கூறின் அரசுடன் இணங்கிச் செல்லும் கூட்டமைப்பின் ஒரு சில தலைவர்களே ஐ.நா சபை அதிகாரிகளுடன் தொடர்பைக் கொண்டுள்ளனர்.

இவர்கள் சர்வதேசப் பிரதிநிதிகளுடன் தாம் உரையாடிய விடயங்களை கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்துவதில்லை. இலங்கை அரசு எதை விரும்புகிறதோ அதை அமுல்படுத்துவது இவர்களின் கடமையாக இருக்கிறது.

இவ்வாறாக தமிழர்களின் அரசியல் தலைமை நேர்மையான போக்குடன் செயற்படாததன் காரணமாக போர்க்குற்ற விசாரணை என்ற விடயம் சர்வதேசம் என்ற அளவில் இருந்து உள்நாடு என்பதாகச் சுருங்கிக் கொள்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்கள் மகிந்தவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காக மைத்திரியை ஆதரித்தார்கள். மைத்திரியை ஆதரித்ததால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விசாரணை என்ற பிடியில் இருந்து விடுபடுவார் என்று தெரிந்திருந்தால், நிச்சயமாக தேர்தலைப் புறக்கணித்து; மகிந்தவை வெற்றி பெறச் செய்து; பதவியில் இருத்தி; சர்வதேச விசாரணைக்கு ஆளாக்கி இருப்பர்.

எனவே, தமிழ் மக்களின் மனங்களைப் புரிந்து கொள்ளாமல் எவரும் செயற்படலாகாது. ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள்; பறி கொடுத்தவர்கள்; இழந்தவர்கள் தமிழ் மக்கள். இந்த இழப்பின் ஒரு வீதத்தைக் கூட, கூட்டமைப்பின் அரசியல் தலைமையில் இருப்பவர்கள் சந்திக்கவில்லை.

ஆகவே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இதயங்களை திரும்பத் திரும்பக் குத்திக் குதறி வேதனைப்படுத்தும் செயலில் எவரும் இறங்கக் கூடாது.

# சர்வதேச விசாரணையை வலியுறுத்தி 24 ஆம் திகதி மாபெரும் போராட்டம்

## யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைகள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே அவசியம் என வலியுறுத்தியுள்ள யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர், உள்ளாட்டு விசாரணையினை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்துள்ளனர்.

இலங்கை மீதான ஐ.நா மனிதவுரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் உறுதியுடன் கொண்டுவரப்படல் வேண்டும் என்பதனை வலியுறுத்தி எதிர்வரும் 24 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டத்திற்கு அனைவரும் அணிதிரண்டு கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக் கழக சமூகம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற பொது அமைப்புக்களுடனான சந்திப்பின் போதே மேற்படி கருத்து ஊடகங்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அ. இராசகுமாரன் கூறுகையில்,

ஈழத்தில் காலம் காலமாக பல்வேறு ஆட்சியாளர்களினால் தமிழர்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

இதன் உச்ச கட்டமாக கடந்த 2009 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு இங்கு நடைபெற்ற அழிவுகள் தொடர்பில் தமிழர்களிற்கு நீதி கிடைக்கவேண்டுமென கடந்த 5 வருடங்களாக போராடி வருகின்றோம்.

இங்கு நடைபெற்ற அழிவுகளுக்கான விசாரணைகளில் உள்ளூர் விசாரணைகள் பக்கச் சார்பாகவும் நீதியற்ற முறையில்தான் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தன.

இவ்வாறான நிலையில் உள்ளூர் விசாரணையில் தமிழர்களிற்கு நம்பிக்கையற்ற நிலையில்தான் சர்வதேசத்திடம் சென்றிருந்தோம்.

இதற்கமைய இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை மார்ச் மாதம் வெளிவரவிருந்த நிலையில் அது பிற்போடப்பட்டுள்ளது.

இலங்கையில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தினை மாத்திரம் காரணமாக கொண்டு அறிக்கை பிற்போடப்பட்டுள்ளமையை கண்டித்தும் செப்ரெம்பர் மாதம் அறிக்கை கட்டாயம் வெளியிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்பேரணி யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து காலை 9 மணியளவில் ஆரம்பித்து நல்லூருக்குச் சென்று அங்கு வைத்து ஐ.நா பிரதிநிதிகளிடம் மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

சர்வதேச விசாரணையினை தற்போதும் ஈழத்தமிழர்கள் விரும்புகின்றார்கள். அதன் அறிக்கையினை எதிர்பார்த்துள்ளார்கள் என்பதனை சர்வதேசத்திற்கு இப் பேரணி மூலம் காட்ட வேண்டிய அவசியம் உள்ளது என்றார் ஆசிரியர் சங்கத் தலைவர்.

மேலும் இவ் பேரணியின் முடிவில் ஐ.நா மனிதவுரிமை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் இலட்சக்கணக்கான கையொப்பங்களுடன் அனுப்பப்பட வேண்டும்.

மேற்குலகுக்கு தேவைப்பட்ட இலங்கையின் ஆட்சி மாற்றம் ஈழத்தமிழர்களிற்கும் நன்மை மிக்கதாக மாற்றுவதற்கு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தொடர்ந்தும் செயற்பட வேண்டும்.

தமிழர்களின் வெளிவிவகாரம் மேற்குலகிற்கு நன்மையை பெற்றுத்தராமல் ஈழத்தமிழர்களிற்கு நன்மையை பெற்றுத்தருவதாக அமைய வேண்டும்.

மக்கள் போராட்டத்தின் மூலமே எமக்கான உரிமைகளினை நீதியினை பெற்றுக் கொள்ள முடியும். தற்போதைய சூழலை பயன்படுத்தி இதனை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும் என இக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

இக் கலந்துரையாடலில் தமிழ் சிவில் சமூக பிரதிநிதிகள், கிறிஸ்தவ பாதிரிமார்கள், மாணவ பிரதிநிதிகள், பொது அமைப்புகள், கல்வியாளர்கள், விரிவுரையாளர்கள் என பல தரப்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## உரும்பிராய் இந்து மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 21-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியை திருமதி சாரதாதேவி பேராயிரவர், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, இலங்கை வங்கி உரும்பிராய் கிளை முகாமையாளர் கு.லவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-11)

## ஆன்மீக உரை

பகவான் ஸ்ரீராம கிருஷ்ண ஜெயந்தி தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு உரும்பிராயிலுள்ள நிலையத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆன்மீக உரையினை சி.சிவமோகன் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அழைக்கிறார் என்ற தலைப்பில் வழங்கவுள்ளார். (இ-5)

## திருடிய தாலிக்கொடியை மீள ஒப்படைத்த திருடன்

(கரணவாய்)

25 பவுண் பெறுமதியான தாலிக் கொடியை திருடிய நபர் அதனை மீண்டும் 3 நாட்களுக்குப் பின்னர் யாருக்கும் தெரியாமல் கொண்டுவந்து வைத்து விட்டு சென்றுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

கடந்த 16-ம் திகதி குறித்த வீட்டின் உரிமையாளர் வெளியே செல்வதற்காக தாலிக் கொடியை எடுக்க சென்றபோது அது அவர் வழமையாக வைக்கும் இடத்தில் இல்லாததை கண்டு அவர் திருட்டு போயுள்ளதை அறிந்துள்ளார்.

இத் திருட்டு சம்பவம் தொடர்பாக உடனடியாக பருத்தித்துறை பொலிஸாருக்கு புகார் வழங்கிய போது வீட்டிற்கு மோப்ப நாய்களுடன் வந்து விசாரணை மேற்கொள்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனை குறித்த வீட்டின் உரிமையாளர் அயலவர்களிடமும் தமக்கு தெரிந்தவர்களிடமும் தெரிவித்துள்ளார்.

பின்னர் நேற்று காலை நித்திரையில் இருந்து எழுந்து வீட்டுக்கு வெளியே வந்த போது முற்றத்தில் தாலி கொடி இருப்பதைப் பார்த்த உரிமையாளர் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளார்.

பொலிஸ் மோப்ப நாய்க்கு பயந்தே குறித்த திருட்டு ஆசாமி திருடிய நகையை மறுபடியும் கொண்டு வந்து வைத்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (செ-60)

### அமைதியின் சொற்கள்

உள்ளே உள்ள நண்பனை அறிந்து கொள்ளுங்கள். இந்த நட்பு எப்பொழுதுமே நீடித்திருக்கும்.

(பிரேம் ராவத்)

## இஸ்லாம் ஆன்மிக சிந்தனை

### சொர்க்கம் வேண்டுமா?

★ பெரும் பாவியை குறித்து புறம் பேசுவது குற்றமாகாது. தான் மறைவாக செய்கின்ற பாவங்களை வெளியில் சொல்பவனைக் குறித்து புறம் பேசுவது குற்றமாகாது.

★ மனைவியை திருப்திப்படுத்துவதற்காக பொய் சொல்லலாம். போர்க்களத்தில் எதிரியை தந்திரத்தால் வெல்வதற்காக பொய் சொல்லலாம்.

★ அல்லாஹ்வுக்கு மிக பிரியத்திற்குரிய தளம் பள்ளிவாசலாகும். அவனுக்கு மிக மிக வெறுப்புக்குஉரிய இடம் கடைவீதியாகும்.

★ சொர்க்கம் வேண்டுமா? விருப்பம் கொண்டவர் பெற்றோர்களை சந்தோஷப்படுத்தவும்.

★ நீங்கள் இரவில் அதிகமாக தூங்காதீர்கள். ஏனென்றால் அதிகமாக தூங்கினால் கியாமநாளில் ஏழையாக எழுப்பப்படுவீர்கள்.

★ பொறாமை மனிதனுடைய நன்மைகளை அழித்து விடுகிறது.

## காப்புறுதி பத்திரத்தினை நாளை பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

களப்பணியில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான காப்புறுதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 6 மணிவரையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரையும் இடம்பெறவுள்ளது.

இது விடயம் தொடர்பாக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இணைப்பு அலுவலர் சி.மதனகுமாரை 0773284415 என்ற கைத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு காப்புறுதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐக்கிய அரபு எமிரேட்ஸை வீழ்த்தியது சிம்பாவே










ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் ஆட்டத்தில் சிம்பாவே 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 8வது லீக் போட்டியில் சிம்பாவே, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதின.

நெல்சன் நகரில் நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற சிம்பாவே அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனை தொடர்ந்து களமிறங்கிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 285 ஓட்டங்கள் எடுத்தது.

அதிரடியாக ஆடிய சய்மான் அன்வர் 67 ஓட்டங்களையும், குராம் கான் 45 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர். மற்ற வீரர்களும் இரட்டை இலக்க ஓட்டங்களை குவிக்க சற்று கடின இலக்கை சிம்பாவே அணிக்கு நிர்ணயித்தது.

சிம்பாவே தரப்பில், சாட்டாரா 3 விக்கெட்டையும், மியர், வில்லியம்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர் 286 ஓட்ட இலக்கை நோக்கி களமிறங்கிய சிம்பாவே அணி 48 ஓவர்களிலே 6 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது. இதனால் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அந்த அணியில் வில்லியம்ஸ் ஆட்டமிழக்காமல் 76 ஓட்டங்களையும், டெய்லர் 47 ஓட்டங்களையும், ஷாகாப்வா 35 ஓட்டங்களையும், ஷிக்கந்தர் 46 ஓட்டங்களையும், எர்வின் 42 ஓட்டங்களையும் எடுத்து வெற்றிக்கு கைகொடுத்தனர்.

பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் என அசத்திய சிம்பாவே வீரர் சீன் வில்லியம்ஸ் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

ஐ.அ.எமிரேட்ஸ் (50 ஓவர்கள்) 285/7

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| ஷைமன் அன்பர் | 67 | 50 |
| குர்ரம் ஹசன் | 45 | 55 |
| கிருஷ்ண சந்திரன் | 34 | 63 |
| பட்டீல் | 32 | 38 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

சிம்பாப்வே (48 ஓவர்கள்) 286/6

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| வில்லியம்ஸ் | 76* | 65 |
| சிக்கந்தர் ரஸா | 46 | 44 |
| கிரெய்க் எர்வின் | 42 | 32 |
| சகாப்வா | 35 | 62 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

சிம்பாப்வே பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| சதாரா | 10 | 1 | 42 | 3 |
| சாதமென் மியர் | 08 | 0 | 39 | 2 |
| வில்லியம்ஸ் | 08 | 0 | 43 | 2 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

ஐ.அ.எமிரேட்ஸ் பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| முகமது தாகிர் | 09 | 0 | 51 | 2 |
| முகமது நவீத் | 10 | 1 | 60 | 1 |
| அம்ஜத் ஜாவேத் | 09 | 0 | 49 | 1 |
| நஷீர் அசிஸ் | 10 | 0 | 53 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவனை...

சிவப்புத் துணிகளை குறுக்கே கட்டி ஆர்ப் பாட்டம் செய்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன் துறை நோக்கிப் பிரயாணம் செய்த ரயில் யாழ். பிறவுண் வீதி 1-ம் ஒழுங்கையில் உள்ள பாது காப்பற்ற ரயில் கடவைப் பகுதியில் நேற்று பி.ப 7 மணியளவில் மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யில் கல்வி பயிலும் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த குகதாசன் குகப்பிரியன் (வயது 17) என்ற மாணவனே படுகாயம் அடைந்துள்ளான்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று நடை பெறவுள்ள நிலையில் (தற்போது பிற்போடப் பட்டுள்ளது) அதற்கான அலங்கார ஆயத்த வேலைப்பாடுகளை மேற்கொண்ட பின் வீடு நோக்கிப் புறப்பட்ட போதே மேற்படி விபத்தில் பிரஸ்தாப மாணவன் சிக்குண்டுள்ளான்.

மாணவனை மோதிய ரயில் அந்த இட தத்தில் நிற்காமல் தொடர்ந்து பயணத்தை மேற் கொண்டது. இதனால் ஆத்திரமடைந்த மக் கள் ரயில் தண்டாவாளத்துக்குக் குறுக்கே மின்கம்பங்களைக் போட்டு மீண்டும் ரயில் அந்த வழியாகப் பயணம் செய்யமுடியாமல் தடுத்துள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து அப்பகுதி க்கு வந்த யாழ். பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி, மக்களுடன் கலந்துரையாடி, இன்று தொடக்கம் கடவையில் காவலர்கள் இருவர் கடமையில் இருப்பர் என்றும் உறுதியளித் தார். இந்த உறுதிமொழியை அடுத்து, தடை கள் அகற்றப்பட்டது.

பிரஸ்தாப மாணவன் நேற்று நள்ளிரவு வரை யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த பகுதியில் பாதுகாப் பான புகையிரதக் கடவை அமைக்கப்பட வேண்டும் என அப் பகுதி மக்கள் ஒன்று திர ண்டு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னர் பல தடவை மேற்கொண் டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (செ-11)

## நாடாளுமன்றம்...

மையிலான அரசாங்கம் நூறு நாள் திட் டத்தை முன்னெடுத்து வருகின்றது.

இந்த திட்டத்திற்கு நாடாளுமன்றின் ஒத்து ழைப்பு அவசியமாகின்றது.

நாடாளுமன்றம் உரிய முறையில் ஒத்து ழைப்பு வழங்கத் தவறினால், புதிதாக மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்ளத் தயங்கப் போவதில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை மையை ரத்து செய்தல், சுயாதீன ஆணைக் குழுக்களை நியமித்தல் உள்ளிட்ட பல முக் கிய விடயங்கள் இந்த நூறுநாள் திட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ளது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தெமட்டகொட பொதுச் சந்தைக் கட்டட அங் குரார்ப்பண நிகழ்வில் நேற்று பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனை குறிப் பிட்டுள்ளார். (செ-11)

## தென்னாபிரிக்க...

இலங்கையில் இனங்களுக்கிடையே யான நல்லிணக்க நடவடிக்கைகளின் நிமி த்தம், தென்னாபிரிக்க குழு ஒன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து வெளி றவுத்துறை பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா, எப்போதும் இலங்கை, தென்னாபிரிக்கர் கள் செய்ததை செய்யப்போவதில்லை. எனி னும் அவர்களிடம் இருந்து உதாரணங்களை பெற்றுக்கொள்ளவுள்ளது.

இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடு கள், இலங்கையில் புதிய அரசாங்கத்தின் சமா தான நடவடிக்கைகளை பாராட்டியுள்ளன.

ஜப்பானிய தூதுவர் நொபுஹிட்டோ இன்று (நேற்று) எம்மை சந்தித்து இலங்கையின் நட வடிக்கைகளை பாராட்டியுள்ளார்.

எனவே எமது நல்லிணக்க முயற்சிகளிற் காக உள்ளூர் திட்டம் ஒன்றை உருவாக்கி சிறந்த முறையில் தீர்வைக் தேட முடியும் என நம்புகின்றோம். இதற்காக இன்னொரு வழிமுறையை முற்றாக நம்பியிருக்க தேவை யில்லை என பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்வு தொட ர்பில் இலங்கை அரசாங்கம் முன்வைத்திரு ந்த கோரிக்கை குறித்து, தென்னாபிரிக்கா இன் னும் உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தை களை ஆரம்பிக்கவில்லை என்று தெரிவிக்க ப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள தென்னாபிரிக்கா வின் தூதுவர் ஜெஃப் டொட்ஜ் இதனைத் தெரி வித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தென்னாபிரிக்காவை ஒத்த தீர்வு ஒன்றினை அமுலாக்குவது குறித்து முன்னாள் அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

அது எவ்வாறான ஒத்துழைப்பாக அமை யும் என்பது தொடர்பில் தெரிவிக்கப்பட வில்லை.

எனினும் இனப்பிரச்சினை விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கவோ, நேரடி தலை யீட்டை மேற்கொள்ளவோ தென்னாபிரிக்கா விடம் கோரப்படவில்லை என அவர் தெரி வித்தார். (செ-11)

## தனியார் சம்பள...

இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங் களை தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதற்கமைய ஊழியர்களின் அடிப்படை சம் பளம் 10,000 ரூபாயாகவும் ஏனைய நிறு வனங்களின் வருமானத்திற்கமைய அவர் களின் சம்பளம் 15 - 35 வீதமாக அதிகரிக்கப் படவுள்ளது. அத்துடன் சம்பள நிர்ணய சபையின கீழ் வராத ஹோட்டல்கள் கடைகள் உட்பட அனைத்து தளங்களுக்கும் சம்பளம் 15 சதவீத த்தினால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (செ-11)

## ஓமந்தையில்...

இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது, வவுனியா, ஓமந்தை பறைநாட்டாங்கல் பகு தியில் உள்ள ரயில் கடவையைக் கடக்க முற் பட்ட மோட்டார் சைக்கிளை யாழ்ப்பாணத்தி லிருந்து சென்ற ரயில் மோதித்தள்ளியதில் அதில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிள் சுக்குநூறாகியது. இந் தச் சம்பவத்தில் ஓமந்தை அரசமுறிப்புக் குள த்தைச் சேர்ந்த கந்தசாமி திருக்குமரன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்து வவு னியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பாதுகாப்புக் கடவையின் காவலாளி பாது காப்புக் கடவையை சரியான நேரத்தில் மூடாதமையினாலேயே இந்த விபத்து ஏற் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசா ரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (செ-11)

## அரிசியின்...

இம்முறை பெரும் போகத்தில் 50 ரூபாய் உத்தரவாத விலைக்கு நெல்லை கொள் வனவு செய்ய முடி யும் எனவும், இதன் ஊடா க அரிசி விலை குறையும் எனவும் தெரிவிக கப்படுகிறது.

அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப் படும் நெல் சிறிய நடுத்தர அரிசி ஆலையா ளர்களிடம் வழங்கி, சந்தைக்கு அரிசி விநி யோகம் செயயப் பட உள்ளது. இவ்வாறு அரி சியை சந்தைக்கு விநியோகம் செய்வதன்மூலம, அரிசி விலையை குறைக்க முடியும்.

எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதியில் அரிசியின் விலை 70 முதல் 80 ரூபாயற்குள் பேண முடியும் என உணவுப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (செ-11)

## இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் இல்ல மெய்வன் மைப் போட்டி நாளை 21-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதா னத்தில் அதிபர் வீ.எஸ்.மகேந்திரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் திருமதி பி.பிறான்சிகா சின்னத்துரை, சிறப்பு விருந்தினராக யா லொக் யாழ் முகாமையாளர் தேவிகைலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-11)

# உலகக் கிண்ணத்தின் பின்னர் ஆஸியின் ஹடின் ஓய்வு



அவுஸ்திரேலியா ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் உப தலைவரும் விக்கெட் காப் பாளருமான பிரட் ஹடின், தான் ஓய்வு பெறும் காலம் அண்மித்துள்ளதாக கூறியுள் ளார். உலகக்கிண்ண தொடரில் விளையாடி வரும் ஹடின், பிரிஸ்பேர்னில் வைத்து இந்தக் கருத்தை கூறியுள்ளார்.

37 வயதை பூர்த்தி செய்துள்ள பிரட் ஹடின், இதுவரை 119 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 3,027 ஓட்டங்க ளைப் பெற்றுள்ளார். 2001ஆம் ஆண்டு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இவர் அறிமுகத்தை மேற்கொண்டார். தான் இந்த உலகக் கிண்ணத்தை ரசித்து வருவதாக வும், இறுதிப் போட்டி மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுவதனால் அங்கே நிறைவு செய்வது சிறப்பாக இருக்கும் என தான் கருதுவதாகவும் கூறியுள்ள பிரட் ஹடின், ஆனாலும் தான் விடை பெறுவது எப்போது என்ற தீர்க்கமான முடிவை எடு க்கவில்லை எனவும் இருப்பினும் மிக விரை வில் அந்த முடிவை எடுப்பேன் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (க)

# இலங்கை அணி அரையிறுதிக்கு முன்னேறும்

## மைக்கல் ஹசி நம்பிக்கை

உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறுவது கடி னம் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மைக் ஹசி கூறியுள்ளார்.

இந்திய அணி உலகக்கிண்ணப் போட்டி யில் தனது முதல் லீக் ஆட்டத்தில் பாகிஸ் தானை வீழ்த்தி வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து வருகின்ற 22-ம் திகதி தென்னா பிரிக்காவை எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில் இந்திய அணியின் உலகக் கிண்ண வாய்ப்பு பற்றி அவுஸ்திரேலிய அணி யின் முன்னாள் வீரர் மைக் ஹசி கூறுகை யில், இந்திய அணியில் திறமையான வீரர் கள் பலர் இடம் பிடித்துள்ளனர். ஆனால் என்னை பொறுத்தமட்டில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறுவது கடினம்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னா பிரிக்கா, இலங்கை ஆகிய 4 அணிகள் அரை யிறுதிக்கு முன்னேறும் என்பதே எனது கணிப்பாகும். உலகக்கிண்ணத்தை வெல்ல அவுஸ்திரேலிய அணிக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது.

அதே சமயம் இப்போது அணிகளின் செயல் பாடுகளை வைத்து எந்த அணி வெற்றி பெறும் என்று கணிப்பது முடியாத காரிய மாகும் என்று தெரிவித்துள்ளார். (க)

## ஏப்ரல் 28க்கு பின்பு பொதுத் தேர்தல்

ஏப்ரல் 28 ஆம் திகதியின் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சர் கரு ஜயசூரிய தெரி வித்துள்ளார்.

மார்ச் மாதம் நடத்தப்படவிருந்த உள்ளு ராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு யோசனையை முன்வைக்க உள்ளதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

உள்ளூராட்சிமன்றங்கள் சிலவற்றுக்கு இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கொழும்பு மாகாண சபை மற்றும் மாகாண நிர்வாக அமைச்சில் நேற்று நடைபெற்றது.

மாகாண சபை தேர்தலை நடத்தும் உத் தேச யோசனை முறைமையின் தொகுதி எல் லையை பிரிக்கும் போது, அநீதி இழைக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார். (செ-11)

## 31.5 கிலோ கஞ்சா வீட்டிலிருந்து மீட்பு

(கொழும்பு)

தனமல்வில, சூரிய - ஆர பிரதேசத்தில் பொலி ஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போது அங்குள்ள வீட்டொன் றிலிருந்து 31.5 கிலோகிராம் கஞ்சா, கடந்த புதன்கிழமை மீட்கப்பட்டதாக தனமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

உரப்பை ஒன்றினுள்ளே கஞ்சா மறை த்து வைக்கப்பட்டிருந்ததாகவும் இச்சம்பவ த்துடன் தொடர்புடைய சந்தேச நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை வெல்ல வாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரணையை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (செ-11)

# வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பொதிகள் வீடுகளில் கையளிக்கப்படும்

## சுங்கத் திணைக்களம் புதிய நடைமுறை

(கொழும்பு)

சாதாரண மக்களின் நலனை கருத்திற் கொண்டு, வெளிநாடுகளில் இருந்து அனுப்பி வைக்கப்படும் பொருட்களை வீடுகளுக்கே கொண்டு சென்று கையளிக்கும் புதிய முறையை சுங்கத்திணைக்களம் நடை முறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சுங்கத்திணைக்களத்தின் பணிப்பாளர் ஜகத் டி வீரவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுங்க தலைமையக த்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரி வித்தார். இம்முறையை மார்ச் மாதத்தின் இறுதியிலிருந்து செயற்படுத்த திட்டமிட்டுள்ள தாகவும் லக் ஸ்ரீ சோவா என்ற தனியார் நிறு வனத்தினூடாக இத்திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள 6 நிறுவனங்களில் தற்போது லக் ஸ்ரீ சோவா நிறுவனத்திடம் மாத்திரமே ஸ்கேனிங் இயந்திரம் இருப்பத னால் இந்நிறுவனத்தின் ஊடாக இத்திட்ட த்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பொதிகளை உடைக் காது ஸ்கேனிங் இயந்திரத்தின் உதவியுடன் சோதனைக்குட்படுத்தி அவற்றை உரிமை யாளர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடு க்கப்படும்.

மேலும் இச்சேவைக்காக உரிமையா ளர்கள் எவ்வித கட்டணங்களையும் செலு த்த வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்தார். பொதிகளை அனுப்புபவர் கண் டணத்தை செலுத்துவதால் பெற்றுக்கொள் பவர் கட்டணம் செலுத்த வேண்டிய அவசி யமில்லை என அவர் தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் வலையில் பாரிய திருக்கை மீன் ஒன்று நேற்றுக் காலை பிடிபட்டுள்ளது. முகத்துவாரம் ஆழ்கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் வலையிலேயே இந்த பாரிய திருக்கை மீன் சிக்கியுள்ளது. சுமார் 1000 கிலோ எடையுடைய இந்த மீன் கொம்பு திருக்கை இனத்தினை சேர்ந்தது என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

### af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS ஐ வழங்குகிறோம். மொழி பெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ். பல்கலைக் கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

**DELF A1 International Diploma :** வகுப்பு ஆரம்பமாகியுள்ளது. பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 3500 ஏனையோருக்கு 9000

உடன் அழைத்து புதிய வகுப்புகளுக்கு பதிவுசெய்யுங்கள்...

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → றக்கா றோட் → AF (9555)


## ஆட்சிமாற்றத்...

யின் விகாராதிபதியும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான மாதுளுவாவே சோபித தேரர், மாற்றத்தை வேண்டி தமிழர்கள் எம்முடன் ஒன்றுசேர்ந்திருந்தமை இம்முறை தேர்தலின் விசேட அடையாளமாக அமைந்திருக்கின்றது.

இதேபோன்று சுதந்திரதின வைபவத்தில் நீண்ட நாட்களுக்குப் பின்னர் தமிழ்த் தலைவர்கள் பங்கேற்றிருக்கின்றனர்.

இது சிறந்த செயற்பாடாகும். இது போன்ற நல்லெண்ண செயற்பாடுகள் தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும்.

ஒரே நாட்டிற்குள் அனைத்து வளங்களையும் பகிர்ந்துகொண்டு ஒற்றுமையாக வாழ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்எனத் தெரிவித்தார்.

அதேவேளை கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து நேரடியான அவதானிப்புகளை மேற்கொண்டு திரும்பியிருந்த சமூக நீதிக்கான அமைப்பின் அங்கத்தவரும், மனித உரிமைகளுக்கான மதத் தலைவர்கள் அமைப்பின் ஸ்தாபகருமான அருட் தந்தைரீட்யல்டன் பெர்னாண்டோ ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையில்,

கடந்த வாரத்தில் வடக்கு, தெற்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் அடங்கிய குழுவினரை மட்டக்களப்பில் சந்தித்தோம்.

இங்கு எமது அங்கத்தவர்கள் நேரடி அவதானிப்பைமேற்கொள்ள முற்பட்டபோது புலனாய்வாளர்களால் மட்டுப்படுத்தப்பட்டனர்.

நல்லாட்சி மாற்றம் ஏற்படுவதாகக் கூறுகின்றனர். ஆனால், இன்னமும் பழைய நிலைமையே கிழக்கில் காணப்படுகின்றது. இந்த நிலையை மாற்றவேண்டியது அவசியம். எமக்கிடையில் பிழையான எண்ணங்கள் இருப்பின் அவற்றைக் களைய வேண்டும்.

நாம் பயன்படுத்தும் வசனங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் அது முதற்கொண்டு மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும். தெற்கிலிருப்பவர்களுக்கு மட்டுமன்றி, நல்லாட்சியின் பலாபலனை வடக்கு, கிழக்கு மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் இன்னமும் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். நல்லாட்சி மாற்றம் ஏற்பட்ட போதும் எவ்விதமான சுதந்திர உணர்வையும் அவர்களிடம் காணமுடியவில்லை.

வியாபார நடவடிக்கை முதற்கொண்டு சுதந்திரமாகச் செய்ய முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

சிவில் வாழ்வுக்குரிய விடயங்கள் இராணுவத்தினரால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதை அங்கு மேற்கொண்ட விஜயங்களினூடாக அறிந்துகொண்டோம்.

மனித உரிமைகளுக்கான மதத்தலைவர்கள் அமைப்பைச் சேர்ந்த 25 பேர் இப்பகுதிக்கு விஜயங்களை மேற்கொண்டோம்.

வருடத்தில் இரு தடவை நாம் சந்திப்பதுண்டு. அந்தவகையிலேயே இந்தச் சந்திப்பும் இடம்பெற்றது. தெற்கிலுள்ளவர்களுக்கு மட்டுமன்றி, வடக்கு, கிழக்கிலுள்ளவர்களுக்கும் நீதி கிடைக்க அரசு வழிகோல வேண்டும்.

காணிப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை ஆகியன அங்கு பெரும் பிரச்சினையாக உள்ளன. இதனைத்தவிர, தமிழர்களுக்கு ஏராளமான தேவைகள் உள்ளன.

அவற்றைத் தீர்த்துவைப்பதற்கு அரசு ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்என மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்தார். (செ-11)


## தவற விடப்பட்டுள்ளது

கடற்கரை வீதி, பருத்தித்துறையில் வசிக்கும் அருளப்பு மரியதாஸ் என்பவருடைய 623333493V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையுடன் NP GQ 9462 இல. உந்துருளியின் Tax, Licence, Insuranceஆகியவைதவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :

(C-206) 077 5131 586

## A/L தமிழ் A,B வேண்டுமா?

- Rev. & Paper -
- Personal / Group
- Tution / At Home

புதியபிரிவு 2015, 2016 DAY

2014 இல் 3 A மாவட்ட 3 ஆம் இடம், இலக்கணப் போட்டி தேசிய முதன்மை பயிற்றுவித்த ஆசான்

- 25 வருட அனுபவத்துடன்

072 6015 230 (9563)

## ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்

## TCT Multi Trade Centre

**யாழ் பிரதேசத்தில் வியாபாரத்துறையில் வெற்றி நடை போடும் உங்கள் ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையத்தில் வாடிக்கையாளர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு**

**வருடாந்தம் எமது வாடிக்கையாளர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வினை நடத்தும் நாம் இன்றும் இந்நிகழ்வினை வெகு சிறப்பாக நடத்தவுள்ளோம்.**

- கடந்த நத்தார் புதுவருட தினத்தில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 100 வெற்றியாளர்கள்
- Osror CFL Bulb கொள்வனவாளர்களில் தெரிவு செய்யப்பட்ட 3 வெற்றியாளர்கள்
- Uniliver பொருட்களை கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களில் 4 வெற்றியாளர்கள்
- Baby cheramy பொருட்களை கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களில் தெரிவு செய்யப்பட்ட 3 வெற்றியாளர்கள்

அனைவருக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் காத்திருக்கின்றன.

இத்துடன்

- Horlicks பால்மாவினை கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கு Laptop (மடிக்கணனி) வழங்கப்படவுள்ளது.

(C-205)

எமது வியாபார வெற்றிக்கு உந்துசக்தியாக விளங்கும் எமது வாடிக்கையாளர்களின் திருப்தியே எமது வெற்றி.

எமது வியாபார நிலையத்தில் ...

- 150க்கு மேற்பட்ட பொருட்களை குறித்த விலையிலிருந்து தொடர்ந்து விலை குறைப்பு செய்யப்பட்டு வருகின்றது.
- ரூபா 25000 பெறுமதியான பொருட்களை இரண்டு மாதங்களுக்கு கொள்வனவு செய்பவர்களுக்கு 500 ரூபா பெறுமதியான Gift Voucher வழங்கப்பட்டு வருகின்றது.
- இலகு படுத்தப்பட்ட Home Delivery Services (4 Km க்கு உட்பட்டது)

வாடிக்கையாளர்களே! நீங்களும் எதிர்கால வெற்றியாளர்களாகுங்கள் அறப்பணியே எமது முதற்பணி

ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் 527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே.இல : 021-7451895


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.